Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 37 இதழ் - 6 ஜீன் - 2024



## 08.06.2024 - கொருக்குபேட்டையில் நடந்த இலவச மருத்துவ முகாமின்போது...










### ஆசானின் அறிவுரையிலே ...


1. நிறுவன ஆசிரியர் உரை 3
2. பாட்டு 11
3. பெண்கள் பகுதி 13
4. வாலிபர் பகுதி 16
5. சிறுவர் பகுதி 19
6. தேவனுடைய படைப்பு 20
7. முழு குடும்பம் 23
8. கள்ளக்காரியத்துக்கு... 27
9. வேண்டாம் என மறுத்து விடு 32

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 37 JUNE - 2024 Issue - 6

ஆசிரியர் உரை

## மோசேயைக் கொல்லப் பார்த்தார் !

இத்தலைப்பின் கீழாக என் உரையை நான் எழுத எண்ணிய போது, எனக்குள்ளாக ஒருவித தயக்கம் வந்தது. காரணம், இது ஒரு கருகலான தலைப்பாக காணப்பட்டதே. இத்தலைப்பு படிப்பவர்களின் புருவத்தை உயரச் செய்வதோடு, அப்படியுமிருக்க முடியுமா என்ற கேள்வியை எழுப்புகிறது. ஒருவேளை இத்தலைப்பைப் பார்க்கும் போது நமது மனநிலை இப்படியாக இருந்தாலும், இது ஆவியானவரால் கொடுக்கப்பட்ட பரிசுத்த எழுத்துக்களில் காணப்படாத ஒரு தலைப்பு அல்ல. இதை என்னுள் உணர்ந்து கொண்ட நான், என் தயக்கத்தையும், தடுமாற்றத்தையும் ஓர் ஓரமாக ஒதுக்கி வைத்து விட்டு தொடர்ந்து நகர்ந்தேன்.

சரி, நம் தாய்மொழித் தமிழ் உட்பட, உலகில் காணப்படும் ஒவ்வொரு மொழியிலும், ஒருவேளை அது பேச்சுவழக்கில் உள்ள ஒரு மொழியாக இருந்தால் கூட, ஒவ்வொரு செயலைக் குறிப்பதற்கு ஏதாவது ஒரு சொல்லோ அல்லது சொற்றொடரோ இருக்கவே செய்கிறது. இது ஒரு பொதுவான விதியாக இருந்தாலும், எல்லா மொழியிலும் உள்ள எல்லா வார்த்தைகளையும் எல்லோரும் விரும்பி விடுவதில்லை. ஏனெனில், சில வார்த்தைகள் பொருளிலும், பாதிப்பிலும் கொடூரம் கொண்டதாகக் காணப்படும். அப்படிப்பட்ட வார்த்தைகளில் ஒன்று தான் ‘கொலை‘ என்பது. ஆயினும், சில நேரங்களில் மிருக குணம் கொண்ட மனிதர்களோடு இவ்வார்த்தை அவ்வப்போது சம்பந்தப்பட்டு விரும்பாதது நடந்து விடுகிறது. இதை எப்படியோ நாம் சீரணித்துக் கொண்டாலும் இந்த வார்த்தை தேவாதி தேவனோடு தொடர்புபடுத்தப்பட்டிருப்பதை எண்ணிப் பார்க்கும் போது நெருடலாகவே உள்ளது. அன்பும், இரக்கமும், நீதியும், பரிசுத்தமும் கொண்ட தேவனோடு இவ்வார்த்தையை எப்படி இணைத்துப் பார்ப்பதென்பது உண்மையில் சவாலாகவே உள்ளது.

சரி, மேலும் தொடர்வதற்கு முன்பாக நமது வழக்கத்தின்படி, இத்தலைப்பைப் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக, இதன் பின்னணிக்குள்ளாகக் கடந்து வந்து விடுவோம்.

மோசே, ஆம், மோசே தாசன் பழைய ஏற்பாட்டின் ஏகபோக நாயகன். இவன் பற்றி எழுத எங்கே ஆரம்பிப்பது, எப்படி ஆரம்பிப்பதென்றே தெரியவில்லை. பழைய பிரமாணங்களின் பிதாமகனாகிய இவன் வாழ்ந்த காலம் 120 ஆண்டுகள். **தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன்** (எபி 3:2) என்று தேவனால் பெருமைப்படுத்தப்பட்ட இவன் ஆயுள் காலத்தை 3 பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் 40 ஆண்டுகள், பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்ற மதிப்பு மரியாதையோடு எகிப்தில் அரண்மனை வாழ்க்கை. அடுத்த 40 ஆண்டுகள், சுமார் 350 கி.மீ தூரத்திலிருந்த மீதியான் தேசத்துக்கு ஓடிப்போய் வனாந்திரத்தில் ஆடுகளின் பின்னாகத் திரியும் அவல வாழ்க்கை. மூன்றாவது கட்ட வாழ்க்கை மிகவும் சுவாரசியமானது. இந்த 40 ஆண்டுகால வாழ்வில் கீழ்ப்படியாமையும், முரட்டாட்டமும் நிறைந்த மனித ஆடுகளாகிய இஸ்ரவேல் ஜனங்களை கட்டுப்படுத்தி வழிநடத்தும் நெருக்கடி தந்த வாழ்க்கை.

நமது தலைப்புக்கான சம்பவம் மூன்றாம் கட்ட வாழ்வின் ஆரம்ப நிலையில் நடந்துள்ளது. ஆம், தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துக்கொண்டு ஒருசமயம் ஓரேப் மட்டும் மோசே வந்தான். அங்கே ஓர் அற்புதக் காட்சி. கர்த்தருடைய தூதன் பற்றியெரியும் அக்கினி ஜூவாலையிலே நின்று தரிசனம் கொடுக்கிறார். முட்செடி அக்கினியில் ஜூவாலித்து எரிந்தும் அது வெந்து போகாமலிருப்பது எப்படி என்று மோசே அதிர்ச்சி கலந்து ஆச்சரியத்துடன் கிட்டப் போய்ப் பார்க்கலாம் என்று முயன்ற நிலையில் ஒரு சத்தம். தொடர்ந்து நடந்த உரையாடலின் ஒரு கட்டத்தில் '**நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா** என்ற அழைப்பு (யாத். 3:10 ). அவன் 'நான் எம்மாத்திரம்' என்று கூறி தன் விருப்பமின்மையை வெளிப்படுத்தியதோடு, (3:11) நான் போனாலும் **என்னை நம்ப மாட்டார்கள், என் வாக்குக்குச் செவி கொடுக்க மாட்டார்கள்** என்றான் (4:1).

அப்பொழுது கர்த்தர், அவனுக்கு நம்பிக்கை ஊட்டும்படியான இரண்டு அற்புதங்களை, கோல் சர்ப்பமாகி மீண்டும் கோலாகுதல் மற்றும் 'கை வெண்குஷ்டம் பிடித்து மீண்டும் மற்ற மாமிசம் போலாகுதல் என்று (4:2-7) நடப்பித்தார். அதன் பின்னரும் அவன், **நான் வாக்கு வல்லவனல்ல; நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன்** என்று தன் விருப்பமின்மையை அழுத்தமாகத் தெரிவித்தான். இங்கே நீயா, நானா போட்டி போன்ற ஒரு சூழல். மோசே ஒத்துக்கொண்ட பாடுமில்லை, இவனை விட்டபாடுமில்லை.

தேவன் இவனுக்கு மேலும் நம்பிக்கையூட்டி, 'இந்தக் கோலை உன் கையாலே பிடித்துக் கொண்டு போ, இதனால் நீ அற்புதங்களைச் செய்வாய்' என்றார் [4:17]. இப்படித் தனக்கு நடந்தவைகளைத் தன் மாமனாகிய எத்திரோவுக்கு விவரித்து உத்தரவு கேட்டபோது, 'ஞானமான செயல்பாடுகளுக்குச் சொந்தக்காரனான எத்திரோ'. 'சுகமாய்ப் போய்வாரும்' என்று வழியனுப்பி வைத்தான். மோசே, தன் மனைவியாகிய சிப்போராள் மற்றும் மக்களாகிய கெர்சோம், எலியேசருடன் கழுதை சவாரி மூலம் எகிப்தை நோக்கிப் புறப்பட்டான் [4:18–20].

இந்தப் பயணத்தின் இறுதி நாட்களை இவன் எட்டி விட்டான். அதாவது, எகிப்தை அடையக்கூடிய நாள் கிட்டத்தட்ட நெருங்கி விட்டது. அப்பொழுது, **தங்கியிருந்த இடத்தில் கர்த்தர் அவனுக்கு எதிர்ப்பட்டு, அவனைக் கொல்லப் பார்த்தார்** [4:24]. அங்கே யார் எதிர்ப்பட்டது ? கர்த்தர். எதிர்ப்பட்டு என்ன செய்தார்? கொல்லப் பார்த்தார். யாரை ? மோசேயை. ஒன்றுமே புரியலே! அப்படித்தானே. இதே கர்த்தர் தான் இதே மோசேயைக் கொண்டு **கொலை செய்யாதிருப்பாயாக** என்று பின்னாளில் கட்டளை கொடுத்துள்ளார் [யாத் 20:13]. ஆனால், இங்கோ, பிரமாணங்களின் தந்தையாகிய மோசேயையே கர்த்தர் கொல்லப் பார்க்கிறார்!

'அப்பொழுது சிப்போராள் ஒரு கருக்கான கல்லை எடுத்து, தன் புத்திரனுடைய நுனித்தோலை அறுத்து, அதை அவன் கால்களுக்கு முன்பாக எறிந்து நீர் எனக்கு இரத்த சம்பந்தமான புருஷன் என்றாள். **பின்பு அவர் அவனை விட்டு விலகினார்** [4:25,26].

ஏன் கர்த்தர் அவனைக் கொல்லப் பார்த்தார் என்பதற்கான நேரிடையான **காரணம்** வசனங்களில் இல்லாவிட்டாலும், மோசேயின் குமாரரில் ஒருவனுக்கு விருத்தசேதனம் நடந்தவுடன் கர்த்தர் அவளை விட்டு விலகினார் என்றிருப்பதால், **அதுதான் பிரச்சனை** என்று நம்மால் அனுமானிக்க முடிகிறது. ஆம், ஆதியிலே தேவன் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்த போது, 'உங்களில் தலைமுறையாகப் பிறக்கும் **ஆண் பிள்ளைகளெல்லாம் எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும்...**இப்படி என் உடன்படிக்கை உங்கள் மாம்சத்திலே **நித்திய உடன்படிக்கையாக இருக்கக்கடவது.** நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படாதிருக்கிற நுனித்தோலுள்ள ஆண் பிள்ளையாக இருந்தால், அந்த ஆத்துமா என் உடன்படிக்கையை மீறினபடியால், **தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்**[ஆதி. 17:12–14].

இது சம்பந்தமாக இரண்டு காரணங்களை நாம் பரிசீலிக்க முடியும்.

1. தான் அந்நிய மண்ணாகிய மீதியான் தேசத்தில் இருந்தபடியால், ஓர் எபிரெயனுக்குரிய பக்திக் கடமைகள் தான் இருக்குமிடத்தில்

அவ்வளவு அவசியமில்லையென்று எண்ணியிருக்கலாம். (ஆனால், பக்தியுள்ள மோசே இப்படி எண்ணியிருப்பானா என்ற கேள்வியும் கூடவே ஒட்டிக் கொண்டு வருகிறது.)

2. தன் மனைவியாகிய சிப்போராள், முதல் மகனுக்கு விருத்தசேதனம் நடந்த போது, அச்சூழலைச் சரியாகக் கையாளத் தெரியாத நிலையில், பெரும் சரீரப் பாதிப்பு ஏற்பட்டிருந்து, ஒருவேளை அடுத்தவனுக்கும் அதே நிலை வர வேண்டாம் என்று எண்ணித் தவிர்த்திருக்கலாம்.

இது சம்பந்தமாக மோசேக்கும், சிப்போராளுக்கும் வாக்குவாதம் கூட நடந்திருக்க வாய்ப்பு தெரிகிறது. எப்படியெனில், கர்த்தர் மோசேயைக் கொல்லப் பார்த்த போது, மோசே என்ன நிலையிலிருந்தானோ நமக்குத் தெரியாது. ஆயினும், அங்கே கர்த்தரோ அல்லது மோசேயோ சிப்போராளிடம் எதுவும் சொல்லாத ஓர் நிலையில், அந்நியப் பெண்ணாகிய சிப்போராள் **விருத்தசேதனம் செய்யாததுதான் கர்த்தரின் செயலுக்குக் காரணமாக இருக்க வேண்டுமென்று எண்ணி** சாதுரியமாகச் செயல்பட்டது ஆச்சரியமாக உள்ளது. ஒருவேளை மோசே, பிரயாண நாட்களிலே கூட நான் தவறு செய்து விட்டேன், என் மகனுக்கு விருத்தசேதனம் செய்யத் தவறிவிட்டேன், என் தேவன் என்னைக் குறித்து என்ன நினைப்பாரோ என்றெல்லாம் புலம்பிக் கொண்டிருந்திருப்பானோ?! யாருக்குத் தெரியும்? உண்மை தான். அப்படியில்லையென்றால். விருத்தசேதன உடன்படிக்கை பற்றி எவ்வித அறிவும், புரிதலும் இல்லாத நிலையில், எப்படி உடனடியாக சிப்போராள் செயல்பட்டிருக்க முடியும்? தன்னுடைய சாதுரியத்தாலும், சமயோசிதத்தாலும் விரைந்து செயல்பட்டு, தேவ கோபத்தை ஆற்றி தேவச் செயலை மாற்றி இரத்தத்தால் தன் கணவனின் உயிரை மீட்டாள்

சரி, இந்தச் சம்பவத்திலிருந்து நமது பக்தி வாழ்வுக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்த்து பயன்பெறுவோம்.

### I. தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல

'கர்த்தர் மோசேயைக் கொல்லப் பார்த்தார் என்னும் தலைப்பிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை என்பது.

பட்சபாதம், ஒருதலைப்பட்சம், முகதாட்சண்யம் போன்றவை ஒரே பொருளைத் தரும் வித்தியாசமான வார்த்தைகள். இது பெரும்பாலும் மனிதர்கள் சம்பந்தப்பட்ட ஒரு தீங்குணம். ஆனால், பரலோகத்தின் தேவன் அப்படிப்பட்டவர் அல்ல ( உபா. 10:17, அப். 10:34). தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல என்பதை மோசே பற்றிய சம்பவத்தில் நாம் தெளிவாய்க் காண முடிகிறது. தேவன் கொல்லப் பார்த்த மனிதர் யார்? மோசே தாசன். பழைய, புதிய ஏற்பாட்டு யூதர்களால் மிக உயர்ந்த

இடத்தில் வைக்கப்பட்டு, இன்னும் சொல்வதென்றால் இயேசு ஆண்டவருக்குக் கிட்டதட்ட இணையாகப் பார்க்கப்பட்டவன். இவனைக் கொண்டுதான் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து கானானுக்குள் கொண்டு போய்ச் சேர்க்க சித்தம் கொண்டார் (யாத். 12:30-38 ) நியாயப்பிரமாணங்கள் இவனைக் கொண்டே கொடுக்கப்பட்டது (யாத். 20-23). இன்னும், இவனிடத்தில் தான் ஆசரிப்புக்கூடாரத்திற்கானவைகள் வெளிப்படுத்தப்பட்டது. ( யாத்.36 40). இப்படி எல்லா நிலைகளிலும் நாம் எல்லோரும் கழுத்து வலிக்க அண்ணார்ந்து பார்க்கும் இடத்தில் இருந்த ஒரு மாமனிதன் தான் மோசே.

ஆனால், தேவன் மோசேயை நாம் பார்ப்பது போலும், ஏனைய யூதர்கள் பார்ப்பது போலும் பார்க்கவில்லை. என்னுடைய பிரமாணங்களுக்கு மோசே **கீழ்ப்படிந்தானா** அல்லது **கீழ்ப்படியவில் லையா** என்றே பார்த்தார். வேறு எந்தத் தகுதியம்சங் களையும் கர்த்தர் பார்க்கவில்லை. தள்ளப்பட்ட சவுல் ராஜாவுக்குப் பதிலாக, வேறு ராஜாவைத் தெரிந்தெடுக்க சாமுவேல் ஈசாயின் சென்ற பொழுது சொல்லப்பட்ட வார்த்தைகளை உங்களுக்கு இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். **மனுஷன் முகத்தை பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தை பார்க்கிறார்** என்றார் (1 சாமு. 16:7). இந்தத் தேவன், **தான் அழைத்து அனுப்பிய மோசேயின் முகத்தைப் பார்க்காமல்,** தான் ஏற்கனவே விதித்த பிரமாணங்களின்படியே (ஆதி. 17:14) பார்த்தான்.

அருமையானவர்களே, பாரபட்சம் பார்க்கிற காரியத்தில் நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம் ? நாம் ஒருவனைப் பார்க்கும்போது அவனுடைய குலம் என்ன, கோத்திரம் என்ன, தகுதி என்ன, தகுதியின்மை என்ன, அவனுடைய செல்வம் என்ன, செல்வாக்கு என்ன என்று எல்லா கணக்கையும் மனதுக்குள் போட்ட பிறகு தானே, ஒரு நிலைப்பாட்டுக்குள்ளாக வருகிறோம். இக்காரியத்தில் உலக மக்களுக்கும், தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்பவர்களுக்குமிடையே எந்த வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை. உண்மையில் இது ஒரு வெட்கக்கேடு. யாக்கோபு ஆசிரியரைக் கொண்டு தேவன் கொடுக்கும் ஓர் எச்சரிப்பைப் பாருங்கள். '**பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ்செய்து, மீறினவர்கள் என்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்**' (யாக். 2:9), ஆகவே, நியாயச்சிந்தையோடும், தேவ பயத்தோடும் நமது அணுகு முறையை இனிமேலாகிலும் அமைத்துக் கொள்வோம்.

**II. வழிநடத்துபவர்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும்**

'கர்த்தர் மோசேயைக் கொல்லப் பார்த்தார்' என்னும்

தலைப்பிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், வழிநடத்துபவர்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பது.

முன்மாதிரி என்பது மற்றவர்களால் பின்பற்றப்படுவதற்கு ஏற்றதாக இருக்கும் செயல்கள். இது இரண்டு வகைப்படும். நல்ல முன்மாதிரி மற்றும் கெட்ட முன்மாதிரி. பெரும்பாலும் இப்பொழுது கிடைப்பதெல்லாம் அது சரீர வாழ்வாக இருந்தாலும், ஆன்ம வாழ்வாக இருந்தாலும் கெட்ட முன்மாதிரி தான். இதன் விளைவாக கலாச்சாரச் சீரழிவும், ஒழுக்கக் கேடும் கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிரு க்கிறது. நல்ல முன்மாதிரிகள் மிகவும் அருகி விட்டது. அதுவும் ஆன்ம வாழ்வில் சிறந்த முன்மாதிரிகள் தேய்பிறையாகிக் கொண்டுள்ளது. ஆனால், வேதாகமம் முன்மாதிரி செயல்பாட்டுக்கு வெகு முக்கியத்துவம் கொடுக்கிறது. **மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்** என்றார் பவுல். [1 கொரி.9:27].

இங்கே **மற்றவர்களுக்கு** என்னும் வார்த்தை நம் தலைப்போடு நேரிடையாக சம்பந்தப்படுகிறது. எப்படியெனில், எகிப்திலுள்ள இஸ்ரவேலை விடுவித்துக் கொண்டு வரும்படி மோசேயை தேவன் அழைத்தார். யார் இந்த இஸ்ரவேலர்கள் ? விருத்த சேதனம் பெற்ற சந்ததியார். விருத்தசேதன உடன்படிக்கையை எகிப்தின் **அடிமைத்தனத்தில் கூட** மறவாமல் கைக்கொண்டு வருகிற தேவ ஜனங்களை விடுவித்து வரும்படி செல்கின்ற மோசே, தன் குடும்பத்திலே அதைச் செய்யாமல் இருந்தான். மீதியான் தேசத்திலிருந்தபோது மோசேயின் மனநிலையை தேவன் ஒருவாறாகப் பொறுத்துக் கொண்டார். சொல்லப்போனால், எகிப்தை நோக்கிய பயணத்தில்கூட ஒரு கட்டம் வரைக்கும் **கால அவகாசம்** கொடுத்தார். இனி எகிப்துக்குள் சென்று தேவனுடைய வேலையை ஆரம்பிக்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டது. நம்முடைய அறிவுக்கே இது நல்ல முன்மாதிரி அல்ல என்று தெரியும்போது, நீதிபரராகிய தேவன் அங்கே வாளாயிருப்பாரா? தேவச் சட்டத்தின்படியான தேவ நீதியின் படியான செயலில் இறங்கினார். நல்ல வேளையாக, சிப்போராள் சூழ்நிலையின் தீவிரத்தைக் கனகச்சிதமாகப் புரிந்து கொண்டு செயலில் இறங்கி, மோசேயின் உயிரைக் காப்பாற்றினாள். எதிரான சூழல் வந்த போது, தேவச்சட்டத்தின்படி தவறை உடனடியாகத் திருத்தி பிரச்சனைக்குத் தீர்வு கண்டாள்.

அருமையானவர்களே ! நம்மில் எத்தனை பேர் நம்முடைய பக்தி வாழ்வில் பிறருக்கு முன்மாதிரியை, அதுவும் நல்ல முன்மாதிரியை, பிறர் பின்பற்றுவதற்கான முன்மாதிரியைக் கொடுக்கிறவர்களாக உள்ளோம் ? அப்போஸ்தலனாகிய பவுல், இளைஞனாகிய தீமோத்தேயுவுக்குச் சொல்லும்போது,'உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும்,

நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், **விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு** என்று கூறியுள்ளார் (1 தீமோ. 4:12) இந்த உத்தம இளைஞனுக்கு இப்படியாகக் கூறியதோடு தன் வாழ்வில் அதை நடப்பித்தும் காட்டியுள்ளார். **நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்** என்று.(1 கொரி. 11:1 ) நாம் ஒவ்வொருவரும், விசுவாசத்தில் காலேப் போலவும் (யோசுவா 14:6–15), பக்தியில் யோசுவா போலவும் (யோசுவா 24:15), பரிசுத்த வாழ்வில் தானியேல் போலவும் (எசே. 14:19,20), கிறித்தவ வாழ்வில் பவுல் போலவும் (பிலி 3:17) பிறருக்கு முன்மாதிரியை எல்லா வகையிலும் ஏற்படுத்த வேண்டும்.

அத்தோடு, தம் பக்தி வாழ்வில் குறைகள், மீறுதல்கள் இருக்கிறதென்று தேவனால் ஏதாவதொரு வகையில் குறிப்பாக வசனங்களின் வழியாக நமக்குத் தெரிவிக்கப் படுமானால், அவைகளை உடனடியாக சிப்போராள் போல் களைந்து, தேவனுடனான உறவைச் சீர்படுத்தி, தேவ பாதுகாப்பை இம்மையிலும், மறுமையிலும் பெற்றுக் கொள்ளத் தீவிரம் காட்ட வேண்டும்.

**III. பெற்றோர்கள் கவனமுடன் இருக்க வேண்டும்.**

கர்த்தர் மோசேயைக் கொல்லப் பார்த்தார் என்னும் தலைப்பிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், பிள்ளைகள் காரியத்தில் எச்சரிப்போடு நடந்து கொள்ள வேண்டுமென்பது.

எகிப்துக்குச் செல்லும் வழியில் நடந்த சம்பவத்தைப் பார்க்கும்போது, தங்கள் குமாரர்கள் காரியமாக மோசே, சிப்போராள் இருவருமே தவறிழைத்துள்ளதாகவே தெரிகிறது. எப்படியெனில், தேவ கோபம் **பிள்ளைகள் இருவரில் ஒருவனுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டவுடன்** மாறியிருக்கிறது. அப்படியானால், தேவன் இரண்டு பேரில் **ஒருவனுக்கு நடப்பித்தால் கூடப் போதும்** என்று எண்ணியிருப்பாரா? நிச்சயமாக வாய்ப்பில்லை. அவர் எப்போதும் 100 க்கு 100ஐ விரும்புகிற தேவன். பாஸ் மார்க், குறைந்தபட்ச மதிப்பெண் இப்படியெல்லாம் கிடையாது. அப்படியானால், இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது ? இருவரில் ஒருவனுக்கு ஏற்கனவே விருத்தசேதனம் செய்திருக்க வேண்டும். ஆயினும், இங்கே எழும் கேள்வி, ஏன் இன்னொருவனுக்குச் செய்யவில்லை என்பது தான்.

இதற்கு நம்மால் அனுமானிக்கக் கூடிய காரணம், சிப்போராளின் வார்த்தைகளுக்கு மோசே செவிகொடுத்து விருத்தசேதனத்தை தவிர்த்திருக்கலாம் என்பது தான். மோசே வேதப் பிரமாணங்களால் ஊட்டி வளர்க்கப்பட்டவன். இருவரில் ஒருவனுக்கு ஏற்கனவே விருத்தசேதனம் செய்ததற்கு மோசேயின் பக்திதான் காரணமாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், இது பற்றிய அறிவு அந்நியப்

பெண்ணாகிய சிப்போராளுக்கு இருந்திருக்க நியாயமில்லை. ஆயினும், இரண்டாம் குமாரனுக்கு விருத்தசேதனம் செய்யப்படும் நாள் வந்தபோது, மோசே தன் பக்திக் கடமையைக் கைவிட வேண்டிய அளவுக்கு சிப்போராளிடமிருந்து அழுத்தம் எழும்பியிருக்க வேண்டும். ஆயினும், கர்த்தர் மோசேயைக் கொல்லப் பார்த்த போது, **அவள் உடனடியாக சுதாரித்துச் செயல்பட்டதைப் பார்க்கும் போது,** சிப்போராள் **தன்னுடைய தவறை** உணர்ந்து செயல்பட்டிருப்பதாகவே தெரிகிறது. பிரமாணங்கள் அறிந்த தகப்பன் என்ற அடிப்படையில் மோசேயிடமும் தவறு உள்ளதை நாம் மறுப்பதற்கில்லை. மோசே தான் குடும்பத் தலைவன். தேவனுடைய வார்த்தைகள் மற்றும் உடன்படிக்கைகளை அறிந்தவன். ஆதித் தகப்பனாகிய ஆதாம், ஏவாளின் பேச்சைக் கேட்டு செய்யக் கூடாததைச் செய்தது போல், மோசே சிப்போராளின் வாய்மொழிக்கு இணங்கி, செய்ய வேண்டியதைச் செய்யாமல் விட்டிருப்பதாகவே தெரிகிறது.

குடும்பத்திற்குத் தலைவர்களாக தேவன் கணவன்மார்களையும், தகப்பன்மார்களையும் தான் வைத்துள்ளார். ஏதேன் தோட்டத்தில் கீழ்ப்படியாமை வந்தபோது, ஏவாள் தான் அதற்கு மூலகாரணமாக இருந்திருந்தாலும், தேவன் ஆதாமைக் கூப்பிட்டுத் தான் பேசினார் [ஆதி. 3:9-12]. இங்கேயும் கூட, பிரச்சனைக்குக் காரணமாக சிப்போராள்தான் இருந்திருக்க வாய்ப்புண்டு என்று தெரிந்தாலும்கூட, கர்த்தர் மோசேயைத்தான் கொல்லப் பார்த்தார் [யாத். 4:24]. ஆகவே, பக்திக் கடமைகளையும், குடும்பப் பொறுப்புகளையும் நாம் அப்படியே தட்டிக் கழித்து விட்டு தப்பித்து விடலாம் என்று நினைத்தால் தவறு செய்கிறவர்களாகவே இருப்போம்.

அன்பானவர்களே, நம்மில் பெற்றோர்களாக இருக்கும்படியான பாக்கியம் பெற்றிருக்கும் நாம், பிள்ளைகள் காரியத்தில் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம் ? முற்பிதாக்களில் ஒருவனாகிய ஆபிரகாம் குறித்து, தேவன் சொன்னதைப் பாருங்கள். ‘கர்த்தர் ஆபிரகாக்கு சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும் நீங்கள் நீதியையும், நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார் [ ஆதி. 18:19] பிள்ளைகள் அந்தந்தப் பருவத்திலே அவர்கள் செய்ய வேண்டியதைச் செய்கிறார்களா என்று உறுதி செய்து கொள்வது பெற்றோர்களின் கடமையாயிருக்கிறது.

ஆகவே, கர்த்தராலே பிள்ளைகளைப் பெற்றிருக்கும் பெற்றோர் இப்போதனைகளை உள்வாங்கி, நம்முடைய பிள்ளைகள் தேவப் பார்வையில் குறையற்றவர்களாய் காணப்படவும், நம்முடைய குடும்பத்தின் மீது தேவக் கோபம் வராமல் பார்த்துக்கொள்ளவும், அதினதின் காலத்தில் பக்தி ரீதியாகச் செய்ய வேண்டியவைகளைச் செய்கிறவர்களாயிருப்போம். ஆமென்!!

# பாட்டு

## J.C. சோட்

**சென்ற மாத இதழின் தொடர்ச்சி...**

**ஆ**ராதனையில் வாத்தியக்கருவிகளை உபயோகிப்பதற்கு எதிராக இன்னும் பல வேதாகம அறிஞர்கள் இதுபோன்று பேசியிருக்கின்றனர். ஆனால், இதெல்லாம் எங்கே ஆரம்பமாயிற்று? கத்தோலிக்கச் சபையிலும், பின்னர் அதிலிருந்து பிரிந்தவர்களும் தங்களோடு இசைக் கருவிகளையும் கொண்டு வந்தனர்.

பல பிரிவினைச் சபை மக்கள் வாத்திய கருவிகளுடன் இசைந்து பாடுவதை நியாயப்படுத்த கீழ்க்கண்டவற்றைக் கூறுகின்றனர்.

தாவீது இதை உபயோகித்தான் என அவர்கள் சொல்லுகிறார்கள். அது உண்மையாக இருக்கலாம். ஆனால், தாவீது நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தான்; நாமோ வேறு சட்டத்தின் கீழ் வாழ்கிறோம். தாவீது செய்தான் என்பதற்காக மட்டும் நாமும் அவ்வாறே செய்ய வேண்டியதில்லை. அப்படித்தான் செய்ய வேண்டும் என்றால், எருசலேமுக்கு மிருகபலி செலுத்த வருடத்திற்கு ஒரு முறை நாம் செல்ல வேண்டியதிருக்கும். வாத்தியக் கருவிகளை இசைப்பதில் தாவீதை முன்னுதாரணமாகக் காட்டுவோர் எருசலேமுக்கு வருடந்தோறும் செல்லவும், ஒருவேளை இது போன்ற இன்னும் வேறு காரியங்களைச் செய்யவும், தயாராக இருக்க வேண்டும். ஆனால், தாவீது செய்த சகலவற்றையும் செய்ய அவர்கள் தயாராக இல்லை. யோவான் 1:17; II கொரி 3: எபிரேயர் 10:9 ஆகிய வசனங்களைப் படியுங்கள்.

2. வாத்தியக் கருவிகளை உபயோகிக்கக் கூடாது என வேதாகமம் கூறவில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால், ஆராதனையில் நிறைய காரியங்களைச் செய்யக்கூடாது என்றும் வேதத்தில் சொல்லவில்லை. என்றபோதிலும் எதைச் செய்ய வேண்டுமென்று அது சொல்லுகிறது; அதாவது பாட வேண்டுமென அது சொல்லுகிறது. (எபே.5:19). அப்படியானால் பிறவற்றை அது நீக்கிப் போடுகிறது.

3. அது ஒன்றும் தவறல்ல என அவர்கள் கூறுகின்றனர். வீடுகளில், திருமணங்களில் இன்னும் பொழுது போக்காக இசைக் கருவிகளை உபயோகிப்பதில் தவறு எதுவும் இல்லாதிருக்கலாம். ஆனால், ஆராதனை என்பது வேறு. கர்த்தர் கட்டளையிடாத போது ஆராதனையில் அதைச் சேர்ப்பது தவறாகும். (வெளி. 22:18, 19).

4. நமது ஆராதனைக்கு அது உதவியாக இருக்கிறது என்று அவர்கள் கூறுகின்றனர். அப்படியானால் நமது கர்த்தர் ஏன் அதைக் கட்டளையிடவில்லை? ஏனெனில், அதை உபயோகிப்பது உதவியாக இல்லாமல், உண்மையில் அது ஆராதனையில் ஒரு அங்கமாகி விடுவதால் கட்டளையிடப்படவில்லை. இது வசனத்திற்கு ஏற்புடையதல்ல.

5. பரலோகத்தில் இசை இருக்கும் என்று அவர்கள் கூறுகின்றனர். வாத்தியக் கருவிகளுடன் பரலோகத்தில் இசை இருப்பதாக வசனம் உபதேசிக்கவில்லை. அப்படியே அது சொன்னாலும்கூட ஆராதனையில் அதை உபயோகிப்பதை நியாயப்படுத்தாது. பரலோகத்தில் அநேக காரியங்கள் இருக்கும். அவற்றையெல்லாம் நாம் ஆராதனையில் இங்கு செய்ய முடியாது.

6. அவர்கள் அதை விரும்புவதாகக் கூறுகின்றனர். நல்லது. நான் கேக், குளிர்பானங்கள் ஆகியவற்றை விரும்புகிறேன். எனவே அவற்றை ஆராதனையில் வைத்துக் கொள்ள முடியுமா? நாம் விரும்புகிறோமா இல்லையா என்பதல்ல; கர்த்தர் அதை விரும்புகிறாரா என்பதே கேள்வி.

எனவே, கர்த்தரின் நாளில் நாம் ஆராதனைக்குக் கூடி வரும் போது நமது வாய்ப்பாட்டினால் நாம் கர்த்தரை மகிமைபடுத்துவோம். ஆவியோடும் உண்மையோடும் இதைச் செய்ய வேண்டும். ஆகவே, நாம் கருத்தோடும் சகல நேர்மையுடனும் பாட வேண்டும். சுவிசேஷத்தில் கூறப்பட்ட படியும் நாம் பாட வேண்டும்; அதாவது கர்த்தரை வாயால் புகழ்ந்து பாடவேண்டும். அது மட்டுமல்ல, பாடல்கள் வசனத்தின்படியானதாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் அமைந்திருக்க வேண்டும்.

பிராந்திய சபை கூடி பாட வேண்டுமென வேதாகமம் கற்பிக்கிறது. அதாவது, சங்கீதங்களையும், பாடல்களையும், கீர்த்தனைகளையும் நமது குரல்களால் இசைக்க வேண்டுமென்று கூறுகிறது. இந்தப்பாடல்கள் மூலமாக நாம் தேவனைப் புகழுகிறோம், ஒருவருக்கொருவர் உபதேசிக்கிறோம், கர்த்தரிடம் விசுவாசமாக இருக்க ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்துகிறோம்.

கருவிகளின் சத்தங்களும் இடையூறுகளும் இன்றி, அதே சமயம் பக்தியோடும் சமாதானத்தோடும் சாந்தமான இதயத்தோடும் பரலோகத்தின் தேவனை நோக்கி நாம் சேர்ந்து நமது குரலை எழுப்பி, வாயினால் இப்படிப்பட்ட பாடல்களை இனிமையாகப் பாடுவது எவ்வளவு அருமையாக இருக்கிறது! இதைவிட அதிகப் பொருத்தமானது என்ன இருக்க முடியும்? இதைவிட உணர்ச்சிப் பூர்வமானது என்ன இருக்க முடியும்? இதையே தேவன் விரும்புகிறார்.

பெண்கள் பகுதி

# எண்ணங்கள் நம்மை உருவாக்குகிறது

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**ஆ**ம், எண்ணங்கள் நம்மை உருவாக்குகிறது. எல்லாக் காவலோடும் நம் இருதயத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். ஒருவனின் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான் (நீதி 23 : 7). மனிதனின் நற்பண்பு என்னும் கோயிலை அமைதியாகக் கட்டுவது நம்முடைய எண்ணங்கள் தான். அவைகள்தாம் கட்டிடத்திற்கு முழு நிறத்தையும், அமைப்பையும் கொடுக்கிறது. நாம் எப்படி இருக்கவேண்டும் என்று எண்ணுகிறோமோ அப்படி ஒருவேளை இல்லாமல் இருக்கலாம். ஆனால், நம் எண்ணம்தான் நம்மை நிர்ணயிக்கிறது.

நம் ஒவ்வொருவரின் உள்ளும், புறமும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவையாகவே உள்ளது. (மத் 15 : 18 – 20; லூக்கா 6 : 45). உள்ளத்தில் இருக்கும் எண்ணம் நம்மை உலகத்திற்குக் காட்டுகிறது. கிணறு போன்று இருக்கும் நம் உள்ளத்தில் இரு ந்துதான் பேச்சு, செயல் போன்றவைவெளியே வருகின்றன. இதைத்தான் இயேசுவானவர் மத் 5 : 21 – 28 வசனங்களில் விபரமாக பேசியிருக்கிறார். எண்ணங்கள் நம்மை உருவாக்குகிறதினால் உள்ளான மனிதனுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். (I பேதுரு 3 : 3 – 6). வெளியே தெரியும் மனிதன் பற்றி நிறைய காரியங்கள் கேள்விப்படுகிறோம். ஆனால், கவலைக்கிடமாக இருக்கும் உள்ளான நிலையைப் பற்றி அறிவதில் வெகு தொலைவில் இருக்கிறோம். உள்ளத்திற்குள் இருப்பவைகளோடு நமக்கு பின்னும், முன்னும் இருக்கிற காரியங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவைகள் சிறு, சிறு விஷயங்களாகவே இருக்கிறது.

இறுதியாக, நம் எண்ணங்கள்தான் நாம் அடையவேண்டிய இலக்கை நிர்ணயிக்கிறது. எண்ணத்தை விதைத்து செயலை அறுக்கிறோம். செயல் விதைக்கப்பட்டு அங்கே ஒரு பழக்கம் அறுக்கப்படுகிறது. பழக்கம் விதைக்கப்பட்டு அங்கே ஒரு பண்பு அறுக்கப்படுகிறது. பண்பு விதைக்கப்பட்டு வாழ்வு அறுக்கப்படுகிறது. வாழ்க்கை விதைக்கப் படும்போது இறுதியாக இலக்கு அறுக்கப்படுகிறது. தனிப்பட்ட வாழ்க்கையானாலும், தேசிய

அளவிலான காரியங்களானாலும் எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு. ஆகவே, ஒரு சல்லிக்காசுக்காக நம்முடைய எண்ணங்களை விற்றுவிடக்கூடாது. வேறு வகையாகச் சொன்னால் எண்ணங்களின் படிதான் நம்முடைய நித்தியம் இருக்கும்.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! எண்ணங்கள் பற்றி பார்த்தோம். அடுத்ததாக, நம்முடைய இயற்கையான பண்புகள் பற்றி பார்ப்போம். பூமியிலிருந்து பரலோகத்திற்கு உள்ள தூரம் ஏதோ அதன் உயரத்தின் அளவு அல்ல. மாறாக, நம்முடைய மனப்பான்மையில் அது அருகிலா அல்லது தூரத்திலா என்பது உள்ளது. தேவனைப்பற்றி அவருடைய சபையைப்பற்றி, நம் சகோதரர்களுடன் நமக்குள்ள உறவு, நம்முடைய குடும்பம் ஆகிய இவைகளில் நம் பண்புகள் எப்படி உள்ளது என்பது தான் கணக்கு. இந்தப் பண்புகளில் பாவம் நடந்துவிடக் கூடாது என்பதற்காக நம்முடைய தேவன் கொடுக்கிறதான முக்கியத்துவங் களைப் பார்ப்போம். ரோமர் 1 : 29 – 31 முடிய ஒரு நீண்ட பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. 23 பாவங்கள் அங்கே கூறப்பட்டுள்ளது. கலா 5 : 19 – 21 முடிய 17 பாவங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. I கொரி : 13 : 4 – 8 வசனங் களிலும் இவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

(லூக்கா 15 : 11 – 32) ஆகிய பகுதிகளில் இரண்டு ஊதாரி பையன்கள் பற்றிப் பேசப்படுகிறது. ஒருவன் தூர தேசத்தில், மற்றவன் தன் பண்பில் தவறு செய்தவனாக பேசப்படுகிறான். மூத்தவன் பரிசேயனைப்போல் அடுத்தவனை குற்றப்படுத்தி,விரோதித்து, பொறாமை உணர்வுடன் காணப்படுகிறான். எல்லா பரிசேயர்களும் சாகவில்லை.

ஊதாரித்தனமாக இருப்பவர்களை நாம் கடுமையாக வர்ணிக்கிறோம். ஆனால், பொறாமை,கோபம், பெருமை, மற்றவர்களை நியாயந்தீர்ப்பது போன்றவைகளை பாவமாகவே எண்ணாமல் ஏதோ தெரியாமல் நடக்கும் குற்றங்கள் அல்லது ஏதோ முதிர்ச்சி அடையாத நிலையால் செய்யும் தவறுகள் என்றுதான் பார்க்கிறோம். ஆனால், இயேசு கிறிஸ்து இவைகளைப் பற்றிப் பேசுவதை படித்தோமேயானால் ( மத்தேயு 23 : 27, 28 ) மாயக்காரராகிய ......... மனுஷருக்கு நீதிமான் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலே மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள் என்று சரியாகச் சொல்லியிருக்கிறார்.

நம்முடைய எண்ணங்கள் எவ்வாறு உள்ளது? எண்ணங்களின் நிறம் எப்படியுள்ளது? இதுதான் முக்கியம். இவைகள் தான் நம்முடைய உண்மை நிலையை உலகுக்குக் காட்டுகிறது. எப்போதும் கருப்பு நிற எண்ணம் கொண்டுள்ளோமா? அதாவது, நம்பிக்கையில்லாமல் தோற்றுபோன

மனநிலையோடு, எதுவுமே சரியாக இருக்காது, யாரையுமே நம்பமுடியாது. ஆனால், எல்லோருமே எப்படியோ கணக்குக் கொடுத்தாக வேண்டும் என்று எண்ணும் ஒரு மனநிலை. (பிலி 4 : 13, யோபு 1 : 8 – 12)

இரண்டாவதாக, நம்முடைய எண்ணங்கள் சிகப்பு நிறத்தைக் கொண்டுள்ளதா? அதாவது எப்போதும் வெறுப்பு, கோபம், எரிச்சல், வன்மம் இவைகளையே கொண்டுள்ளதா? (I பேது 2 : 1, கலா 5 : 19 – 21; I கொரி 3 : 1 – 3; எபே 4 : 26; கெலோ 3 : 8) ஆகிய வசனங்களை வாசிப்போம்.

நம்முடைய எண்ணங்கள் மஞ்சள் நிறமாக உள்ளதா? மஞ்சள் நிறமென்றால் கோழையான எண்ணங்கள். அதாவது, ஆவிக்குரிய பலவீனமான நிலை. நாம் பலமுள்ளவர்களாகவும், தைரியமுள்ளவர்களாயுமிருக்க வேண்டும். (I கொரி 16 : 13; எபே : 6 : 10). ஒரு தானியேலாக இருக்க துணிச்சல் கொள்ளுவோம்.

நம்முடைய எண்ணங்கள் வெண்மை நிறமாக உள்ளதா? பிலி : 4, 8ல் அப்பேர்ப்பட்ட அழகான வெண்மை நிறப் பண்புகள் வர்ணிக்கப்பட்டுள்ளது. அவைகளை வாசித்து அந்த சிந்தனைகளைப் பெற்றுக் கொள்வோம்.

அருமையானவர்களே, நம்முடைய எண்ணங்களைக் கட்டுப்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும். பொதுவாகவே நம்முடைய எண்ணங்களில் தீமையான எண்ணங்களும், சிந்தனைகளும் தான் சிறப்பான இடத்தைப் பிடித்துக் கொள்கின்றன. தீமையின் எண்ணங்கள் நினைப்பதை விட அதை நடைமுறைப்படுத்தியும் விடுகிறோமே அது பாவம். நம் தலைக்கு மேல் பறவைகள் பறப்பதை தடுக்க முடியாது. ஆனால், அவைகள் நம் தலைமுடியில் கூடுகட்டாமல் பார்த்துக் கொள்ள நம்மால் முடியும். நம் எண்ணங்களைத் தூண்டிவிடக்கூடிய நாம் காதால் கேட்பவைகள், கண்ணால் பார்ப்பவைகள், வாசிப்பவை இந்த மூன்றையும் மிகவும் ஜாக்கிரதையாக கவனித்தாக வேண்டும். தேவனுடைய வார்த்தையை நம் இருதயத்தில் வைத்திருக்கும்போது அவைகள் நம்மை பாவம் செய்ய விடாமல் காத்துக் கொள்ளும் (சங் 119 : 11).

சங் : 139 : 23, 24 ஆகிய தேவனுடைய வார்த்தைகளில் உள்ளபடி தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து என் சிந்தைகளை அறிந்து கொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும் என்று நாம் தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டும்.

அருமையான சகோதரிகளே, எண்ணத்தில் நாம் சுத்தமுள்ளவர்களாயும், உண்மையுள்ளவர்களாயுமிருப்போம். இது மிக முக்கியம். இவை இரண்டும் இல்லையென்றால் பக்தி வாழ்க்கை இல்லாமல் போய்விடும். எனவே, எண்ணங்களை காத்துக் கொள்வோம். தேவன் அதற்கு உதவி செய்வாராக!! ஆமென்!!!

வாலிபர் பகுதி

# தேவனுடைய நேரம்

Dr. ஏபில் நாயகம்

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர்களே, உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய வார்த்தைகளில் இருந்து உங்களோடு ஆலோசனைகளை பகிரும்படி தேவன் கொடுத்த கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். **உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது** என்று சங்கீதக்காரன் 119:105 இல் சொல்கிறதை நாம் வாசிக்க முடியும். நம்முடைய வாழ்வில் தேவனுடைய வார்த்தைகளையும் ஆலோசனைகளையும் நாம் மையப்படுத்தும் பொழுது தேவன் பிரியப்படுகிற கிறிஸ்தவ வாழ்க்கையை நம்மால் வாழ முடியும்.

நம்முடைய வாழ்வில் தேவனுடைய செயல்பாடும் வழி நடத்துதலும் நம்மால் புரிந்துகொள்ள இயலாது. இதினிமித்தம் பல நேரங்களில் நமக்கு சோர்வும் ஏமாற்றமும் வரலாம். அதிலும் குறிப்பாக நம் அன்றாட வாழ்வின் காரியங்கள் நம்முடைய விருப்பத்திற்கு மாறாக நடக்கும்போதோ அல்லது விரும்பியது நடக்காதபோதோ நாம் மனதளவில் பாதிப்புக்குள்ளாகிறோம். ஆனால், நண்பர்களே தேவனுடைய வழிநடத்துதலின் தன்மைகளை நாம் புரிந்து கொண்டால் அவ்வப்போது ஏற்படுகிற சோர்வுகளை நாம் எளிதில் மேற்கொள்ளலாம் அப்படி ஒரு தன்மை என்னவென்றால் **தேவன் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்கிறார்** என்பது. ஆம் அவருடைய நேரம் சரியான ஒன்றாகவே எப்பொழுதும் இருக்கிறது. தாமதமாகவும் அல்ல, முன்பாகவும் அல்ல, சரியான நேரத்தில் தம்முடைய கிரியைகளை அவர் நடப்பிக்கிறார்.

இந்த உண்மையை வேதாகமத்தின் பக்கங்கள் முழுவதிலும் நாம் பார்க்க முடியும். **காலம் நிறைவேறின போது** என்று நாம் கலாத்தியர் நான்காம் அதிகாரத்தில் வாசிக்கிறோமே, அதன் பொருள் தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம், அவர் முன்குறித்த நாளில் தம்முடைய குமாரனாகிய இயேசுவை இந்த பூமியில் பிறக்கச் செய்து தம்முடைய அநாதி திட்டத்தை நிறைவேற்றினார். இந்த திட்டம் உலகமுண்டாக்கப்படுவதற்கு முன்பே இருந்திருந்தாலும், அதை நிறைவேற்ற பல ஆயிரம் ஆண்டுகள் தேவன் காத்திருந்தார்.

தேவனுடைய வழிநடத்துதலை நாம் புரிந்து கொள்வதற்கு நாம் எஸ்தர் புத்தகத்திற்குச் செல்லலாம். இயேசுவின் பிறப்பிற்க்கு சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவங்களை உள்ளடக்கிய வரலாற்று புத்தகம் எஸ்தர் ஆகும். இந்த நூலின் முக்கியமான கதாபாத்திரங்களாக பெர்சியா ராஜாவாகிய அகாஸ்வேரு, ராணியாக வஸ்தி, ஆமான், மொர்தெகாய் மற்றும் எஸ்தர் ஆவர்.

இந்நூலின் நிகழ்வுகளை சுருக்கமாக பார்க்கலாம். அகாஸ்வேருவின்

கட்டளைக்கு உடன்படாத ராணியாகிய வஸ்தியின் ராஜமேன்மை பறிக்கப்பட்டது. ராணியின் பதவிக்கு பெண்களை தேட வேண்டும் என்ற கட்டளை பிறந்து அதின் வழியாக எஸ்தர் என்ற யூத பெண்ணுக்கு அந்த ராஜமேன்மை கிடைத்தது. தன்னுடைய அண்ணனாகிய மொர்தெகாயின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து எஸ்தர் நடந்துகொண்டாள். ராஜவாகிய அகாஸ்வேருவின் சபையில் உயர் பதவி வகித்தவன் ஆமான். ஆமானுக்கு அரண்மனை வாசலில் உள்ள ஊழியக்காரர்கள் வணக்கம் செய்து நமஸ்கரிப்பதை வழக்கமாக கொண்டிருந்தார்கள். ஆனால், யூதனாகிய மொர்தெகாயோ ஆமானை நமஸ்கரிக்காமல் இருந்தான். இதினிமித்தம் ஆமான் மொர்தெக்காய்க்கு எதிராகவும் யூத ஜனம் அனைத்திற்கும் எதிராகவும் சூழ்ச்சி செய்து அவர்களை அழிக்கவும் வேண்டும் என்று திட்டம் தீட்டினான். அந்த திட்டத்திற்கு ராஜாவை சம்மதிக்கவும் செய்தான்.

இந்த திட்டத்தை அறிந்து கொண்ட மொர்தெகாய் ராணியாகிய எஸ்தரின் உதவியை நாடினான். எப்பொழுதும்போல எஸ்தர் தன் அண்ணனாகிய மொர்தெகாயின் சொல்லுக்கு கீழ்ப்படிந்தாள். ராஜாவிற்கு விருந்து ஒன்றை ஆயத்தம் செய்து அந்த விருந்துக்கு ஆமானையும் அழைக்க வேண்டினாள். அவளுடைய விருப்பத்திற்கேற்ப ராஜாவும் ஆமானும் அந்த விருந்துக்கு வந்தார்கள். முதல் விருந்து முடிந்து ஆமான் திரும்பி தன் வீட்டிற்கு செல்லும்போது வாசலில் அமர்ந்திருந்த மொர்தெகாய் எழுந்து தன்னை நமஸ்கரிக்காததை கண்டு உக்கிரம் நிறைந்தவனானான்.

**தேவனுடைய நேரம்** என்று நாம் முன்னே படித்தோமே,அதின் அழகான நிறைவேறுதல் அடுத்த இருபத்துநான்கு மணி நேரத்தில் நடக்கவிருக்கிறது. ராணியாகிய எஸ்தர் இரண்டு விருந்தை ஏற்பாடு செய்திருந்தாள். இரண்டு நாட்களில் இரண்டு விருந்து. முதல் விருந்து முடிந்து ஆமான் மூர்க்கத்தோடே வீடு திரும்பினான். அன்று ராத்திரியில் இரண்டு சம்பவங்கள் நடைபெறுகின்றன. முதல் சம்பவம் ஆமானின் வீட்டிலும் இரண்டாம் சம்பவம் ராஜாவின் அரண்மனையிலும் நடந்தேறுகிறது. ஆமானின் வீட்டில் மொர்தெகாயை தூக்கில் இடும்படிக்கு திட்டம் தீட்டப்பட்டது. ஆனால், அரண்மனையிலோ ராஜாவுக்கு தூக்கம் இல்லாமல், ராஜாவின் நாளாகம புத்தகம் வாசிக்கப்பட்டது.

அடுத்த விருந்துக்கு ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. ஆனால், அன்று ராத்திரி தேவனுடைய வழிநடத்துதலின் அழகும் மேன்மையும் நம்மை வியப்படைய வைக்கும். ராஜாவின் நாளாகமப் புத்தகத்தில் மொர்தெகாய்கு செய்யப்படவேண்டிய நன்மை ஒன்று செய்யப்படாமல் இருப்பதை ராஜா கவனித்து மொர்தெகாயை கனம் பண்ண முடிவு செய்தார். மொர்தெகாய் எப்படி கனம் பண்ணப்படவேண்டும் என்பதை மொர்தெகாயை கொல்லத் திட்டம் கொண்டுவந்த ஆமானின் வாயாலேயே தேவன் சொல்லச் செய்தார். யூதர்களை அழிக்க ஆமான் திட்டம் தீட்டினான். ஆனால், தேவன் தம்முடைய திட்டத்தை அழகாக நிறைவேற்றினார். இரண்டாம் விருந்தில் ராணியாகிய எஸ்தரின்

வேண்டுதலை ராஜா கேட்டு, ஆமான் என்ற துணிகரம் கொண்டவன் கொல்லப்படவேண்டும் என்று அவனை தூக்கில் போட ராஜா உத்தரவு கொடுத்தார்.

பிரியமானவர்களே, எஸ்தர் புத்தகத்தில் முதல் ஐந்து அதிகாரங்களின் காரியங்கள் சுமார் ஒன்பது ஆண்டுகள் கால அளவில் நடந்தேறியவை. அதிகாரம் ஆறு மற்றும் ஏழு நாற்பத்தெட்டு மணிநேரங்களில் நடந்தவை. ஆமான் கொல்லப்படவேண்டும் என்ற நாற்பத்தெட்டு மணிநேரங்களுக்க ாக ஒன்பது ஆண்டுகள் தேவன் காத்திருந்தார். யூதர்களை பாதுக்காக்க வேண்டும் என்பது அவருடைய சித்தமாக இருந்தாலும் அதற்கு சவாலாய் இருந்த ஆமானை சரியான நேரத்தில் தேவன் அவனுடைய துன்மார்க்கத்தினிமித்தம் நியாயம் செய்தார். எஸ்தர் ராணியாக வேண்டும். அவள் விருந்து ஆயத்தம் செய்ய வேண்டும், முதல் விருந்துக்கு பின்னர் ராஜாவின் தூக்கம் பாதிப்படைய வேண்டும், இதினிமித்தம் மொர்தெகாய் க்கு செய்யப்படவேண்டிய நன்மை ஒன்று வெளிவரவேண்டும். ஆமானுடைய வாயாலேயே மொர்தெகாய் எப்படி கனம் பண்ணப்பட வேண்டும், எப்படி எஸ்தரின் ஜனங்களை அழிக்க நினைத்த ஆமானை எஸ்தரின் சொற்படி தூக்கில் கொல்லவேண்டும், அடடா எத்தனை அழகு. இவை அனைத்திலும் இன்னொரு ஆச்சர்யம் எஸ்தர் புத்தகம் முழுவதும் தேவன் என்ற வார்த்தையையோ கர்த்தர் என்ற வார்த்தையையோ நாம் பார்க்கமுடியாது. ஆனால், அவருடைய கிரியையை வழிநடத்துதலை நாம் ஒவ்வொரு கட்டத்திலும் பார்க்க முடியும்.

இவற்றின் பின்னணியில், எதற்காக ராணி ஆனோம் என்று புரியாமலேயே ராணியாக இருந்த எஸ்தர் இருக்கிறாள். அடுத்தது என்ன நடக்கும் என்று தெரியாத நிலையில் மொர்தெகாயும், யூத ஜனங்களும் இருந்தார்கள். ஆனால், நடந்தவை எல்லாமே ஒரு நோக்கத்தோடு தான் நடைபெற்று இருக்கிறது என்பதை மட்டும் நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

வாலிபர்களே, இச்சம்பவம் நமக்கு கற்றுத் தரும் பாடம் என்ன? தேவனுடைய செயல்பாடு என்பது நம்மால் புரிந்து கொள்ளபட முடியாத ஒன்று. ஆனால், சகலமும் அவருடைய கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது என்ற உண்மை புலப்படுகிறது. நம்முடைய வாழ்விலும் அது உண்மையாக இருக்கிறது. தேவன் சகலத்தையும் அவருடைய நேரத்தில் அழகாக செய்து முடிப்பார். நாம் காத்திருக்க வேண்டியது அவசியம். நாற்பத்தெட்டு மணி நேரத்திற்காக ஒன்பது வருடங்கள் காத்திருக்கவேண்டியிருந்தது. நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம்போல் இருக்கும் என்று நீதிமொழிகள் 13:12 நாம் வாசிக்கமுடியும். எனவே, மனது சோர்வுறும் நேரங்களில் தேவனின் மகத்துவத்தையும் அவருடைய வழிநடத்துதலின் அழகையும் நாம் புரிந்துகொண்டால் சோர்விலிருந்து நாம் விடுதலையாகி சமாதானமாய் வாழலாம்.

✝

திருவர் பகுதி

# தேவனுடைய சிறிய வேலைக்காரர்கள்

Dr. **பிரெய்ஸி**

**ஹா**ய் குட்டீஸ்? எப்படி இருக்கீங்க..?

**நீ**ங்கள் ஒவ்வொருவரும் நன்றாகப் படித்துக் கொண்டிருப்பீர்கள். அத்தோடு, நமது மாத இதழையும் படிப்பீர்கள் என நம்புகிறேன்.

இம்மாதம் நாம் இரண்டு சிறு பிள்ளைகளைப் பற்றியும், தேவன் அவர்களை எப்படி வழிநடத்தினார் என்றும் தெரிந்து கொள்ளப் போகிறோம்.

II ராஜாக்கள் 22-ம் அதிகாரத்தில் தன்னுடைய எட்டு வயதில் ராஜாவான **யோசியா** பற்றிப் பார்க்க உள்ளோம். இக்காலத்தில், வயது எட்டு என்பது மூன்றாம் வகுப்பு படிக்கிற வயது. ஆனால், இந்த **யோசியா** எந்த அனுபவமும் இல்லாமல் எட்டு வயதில் ராஜாவாகி, தேவ ஒத்தாசையோடு தமது முன்னோர்களால் தேசத்திலே வழிபட்ட எல்லா சிலைகளையும், விக்கிரகங்களையும் அகற்றிப்போட்டு தேவனுடைய பாதையில் செம்மையானதை நடப்பித்தான். ஆகவே, தேவன் அவன் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எந்தச் சேதமும் வராமல் சமாதானத்தோடே கல்லறையில் சேர்வாய் என்று வாக்களித்தார். அவருக்குப் பயப்படுகிறவர்களுக்குத் தேவன் எப்படி நன்மை செய்கிறார் பாருங்கள்!

அடுத்து நம்மெல்லாருக்கும் தெரிந்த தாவீது. தாவீது கோலியாத்து சம்பவத்தை நாம் ஞாயிறு பள்ளியில் படித்திருக்கிறோம் [I சாமுவேல் 17 அதி] ஆடு மேய்க்கும் சிறுவனாயிருந்த தாவீது கோலியத்தை ஒரே ஒரு கவண் கல்லில், தேவ தயவினாலே வீழ்த்தினான்.

ஆகையால் பிள்ளைகளே! ஒருவேளை நீங்கள் நினைக் கலாம், நாங்கள் சிறுபிள்ளைகள் தானே, இந்த வயதில் தேவனை நான் நினைப்பதற்கு என்ன இருக்கிறது, அப்படி நினைப்பதால் என்ன நன்மை எனக்கு இருக்கப்போகிறதென்று. ஆனால், வேதாகமத்தில் அநேக சிறுபிள்ளைகள் தேவனுக்காகப் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார்களென்று பார்க்க முடியும். தேவன் அவர்களை அவ்விதம் பயன்படுத்தியிருக்கிறார். ஆகவே, தேவனுக்காகச் செயல்பட அதற்கான வயது வரவேண்டுமென்று காத்திருக்கத் தேவையில்லை.

நீங்கள் தேவனுக்காகவும், சபைக்காகவும் இந்தச் சிறு வயதி லிருந்தே வேலை செய்ய முடியும். ஆம், தேவன் சிறு பிள்ளைகளை நேசிக்கிறார். இந்த வயதில் நீங்கள் அவருக்காக வேலை செய்வதைக் கண்டு தேவன் மகிழ்ச்சியடைவார். இதினிமித்தம் மேலும் மேலும் உங்களை ஆசீர்வதிப்பார்!

*அன்புடன், உங்கள் பிரெய்ஸி அக்கா.*

# தேவனுடைய படைப்பு

*John N. Clayton* தமிழில் : **D. சாமுவேல் ராஜ்**




**வி**யப்பளிக்கும் ஒரு மாபெரும் நீலப் பளிங்குக் கல்லின் மேல் நீங்கள் வசித்துக் கொண்டிருக்கிறீர்கள். பூமி எனப்படும் இந்தப் பளிங்குக்கல் அதைப் படைத்தவருக்கு சாட்சியாக இருக்கிறது. தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை ''அவர் படைத்துள்ள பொருட்கள் மூலமாக' நாம் அறிய முடியும் என வேதாகமம் நமக்குக் கூறுகிறது. (ரோமர் 1:19) 'வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது'' என தாவீது எழுதினார். (சங்கீதம் 19:1)

இப்படியிருந்தும் கூட, பூமியைப் படைத்ததில் தேவனுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என உங்களிடம் கூற முயற்சிக்கும் மனிதர்களும் இருக்கின்றனர். இதெல்லாம் தற்செயலாக நடைபெற்றுள்ள ஒரு பெரிய நிகழ்ச்சியே தவிர பூமியை யாரும் உண்டாக்கவில்லை என இவர்கள் கூறுகின்றனர். நீங்கள் காண்பவை அனைத்தும், மற்ற பொருட்களும் ஒரு தற்செயல் நிகழ்ச்சியின் விளைவால் ஏற்பட்டவை என உண்மையாகவே கருத முடிகிறதா?

**அ. என்ற படத்தைப் பாருங்கள். அது என்ன?**

அது ஒரு விண்மீன் கூட்டம் என்று நீங்கள் கூறினால் அது சரியே. அது 'பால் வீதி மண்டலம்' என்று நீங்கள் சொன்னாலும் அதுவும் சரிதான். வானவீதியில் சிறிதும், பெரிதுமாக கோடிக்கணக்கான விண்மீன்கள் மின்னுகின்றன. மாறுபட்ட வடிவமைப்பிலும் சில விண்மீன்கள் உள்ளன. இந்த விண்மீன்




படம் அ

மண்டலத்தின் ஊடே வானொலி அலை ஒன்று கடந்து செல்ல 1,00,000 ஆண்டுகள் ஆகிறது. ஆனால் பூமியைச் சுற்றிவர 1/8 விநாடி மட்டுமே ஆகிறது. நாம் புரிந்து கொள்ளும் அளவைக் காட்டிலும் தேவனுடைய படைப்பின் பரிமாணம் மகா பெரியதாக இருக்கிறது. தற்செயல் நிகழ்ச்சி எதுவும் இவ்வளவு பெரிய படைப்பை உண்டாக்கி இருக்க முடியாது.


**ஆ. என்ற படத்தைப் பாருங்கள். அது என்ன?**

'சூரியன்' என்று நீர் சொன்னால் அது சரி. தனது சொந்த எரிசக்தியினாலேயே உண்டாக்கப்பட்ட ஒரு வியக்கத்தக்க உலை தான் சூரியன்.



படம் ஆ

படம் இ-ல் காணும் அதனுடைய மத்திய பகுதியில் உஷ்ண நிலையானது 3 கோடி டிகிரியாகும் என்ற போதிலும், தேவன் அனுமதித்தால் இன்னும் 4.5 இலட்சம் கோடி ஆண்டுகள் எரியப் போதுமான எரிசக்தியை நமது சூரியன் பெற்றுள்ளது.




படம் இ

நமது பால்வீதி விண்மீன் மண்டலத்தில் மட்டும் 100 இலட்சம் கோடி விண்மீன்கள் உள்ளன. அந்த எண்ணின் அளவைப் பற்றிப் புரிந்து கொள்ள, பெத்லகேம் நகரில் இயேசு பிறந்ததிலிருந்து ஏறக்குறைய 2 லட்சம் கோடி நிமிடங்கள் கடந்துள்ளன என்பதை கற்பனை செய்து பாருங்கள். ஆகாயத்திலே கோடாகோடி விண்மீன்கள் இருப்பதை வான சாஸ்திரிகள் அறிவர். ஆனாலும், அவற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விண்மீன் கூட்டம் சுற்றி அமைந்த இடத்தில் தேவன் பூமியை நிறுவினார்.

சில விண்மீன்கள் நமது சூரியனை விட மிகவும் வெப்பமானவை. 6000 டிகிரி வெப்பமுள்ள நமது சூரியனுக்குப் பதிலாக, 50,000 டிகிரி சூடுள்ள ஒரு விண்மீனை பூமி சுற்றி வருவதாக இருப்பின் என்ன நடந்திருக்கும்? நாம் கருகிப் போயிருப்போம் அல்லவா? சில விண்மீன்கள் 1000 டிகிரி வெப்ப நிலையில் மட்டுமே இருக்கின்றன. சூரியன் அவ்வளவு குளிராக இருப்பின், நாம் உறைந்து போயிருப்போம் சில விண்மீன்கள் மிகவும் சிறியவையாக இருக்கின்றன. அவற்றின் ஈர்க்கும் சக்தியால் பூமி அவற்றைச் சுற்றிவர முடிவதில்லை. சில விண்மீன்கள் மிகப் பெரியவையாயிருக்கின்றன. அவற்றின் ஈர்க்கும் சக்தி பூமியை நசுக்கிப் போடும். ஆகாய விரிவிலுள்ள கோடிக்கணக்கான

விண்மீன்களில் மிகவும் சிறப்புத் தன்மை கொண்ட விண்மீனை தேவன் தேர்ந்தெடுத்து, அதை பூமி சுற்றிவரச் செய்தார். அது அதிக வெப்பமுள்ளதும் அல்ல, அதிகக் குளிரானதும் அல்ல, மிகச் சிறியதுமல்ல மிகப்பெரியதும் அல்ல. எந்தத் தற்செயல் நிகழ்ச்சியும் இப்படிச் சரியானதை தேர்ந்தெடுக்க முடியாது. தேவனுடைய திட்டத்தினால் மாத்திரமே இது சாத்தியம்.

அந்த மாபெரும் நீலப் பளிங்குக்கல்லே தேவனுடைய திட்டத்தைக் காட்டுகிறது. அது வெள்ளி அல்லது புதன் கிரகத்தைப் போல சூரியனுக்கு மிக நெருக்கத்திலே இல்லை. எனவே நாம் அதிக வெப்பத்தால் தாக்கப்படுவதில்லை. ப்ளூட்டோ கிரகத்தைப் போல சூரியனுக்கு வெகு தூரத்தில் இல்லை. எனவே நாம் அதிகக் குளிரால் அவதிப்படுவதில்லை. புதன் கிரகத்தைப் போன்று அது சிறியதாக இல்லாததால், காற்று (வாயு) பற்றாக்குறை இல்லை. வியாழன் கிரகத்தைப் போல பெரிதாக இருந்து, அதன் ஈர்ப்பு சக்தியால் நம்மை அமுக்கிப் போடவும் இல்லை. நாம் சுவாசிக்கும் அளவிற்கு ஏற்ற சரியான வாயுவும், குடிப்பதற்குத் தகுதியான தண்ணீரும் பூமியில் உள்ளன.




அதனுடைய காந்த சக்தியின் படலம் நம்மைப் பாதுகாக்கிறது. ஆகாயத்திலிருந்து விழும் எரிநட்சத்திரங்கள், நம்மைத் தாக்குவதற்கு முன்பாக எரிந்து போகக் கூடிய நிலை உள்ளது.

'ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்' என வேதாகமம் கூறுகிறது. நானும் நீங்களும் வாழும் இந்தப் பிரம்மாண்டமான கிரகம் தானாகவே உற்பத்தியான அணுக்களின் சேர்க்கையிலிருந்து உருவெடுத்துள்ளது என்ற கூற்றுக்கு இடமேயில்லை. ✝

# முழு குடும்பம்

**சகோ. K.M. பிலிப் – பவானி**

**அ**ன்பான திருமறை ஆசான் வாசகர்கள் யாவருக்கும் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இன்று உங்களுக்கு ஒரு விசேஷமான குடும்பத்தை அறிகப்படுத்துகிறேன். பொதுவாக ஒரு காலத்தில் குடும்பத்தில் 10,12,15 பேர் இருப்பதே பெருமைக்குரியதாயிருந்தது. ஆனால், நான் உங்களுக்கு அறிகப்படுத்துகிற குடும்பம், வானத்தின் நட்சத்திரங்கள் அளவாயும், பூமியின் மணல் அத்தனையாயும் உள்ள மிகப்பெரிய குடும்பமாகும். இதில் நமக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு, இதில் நாமும் அங்கத்தினர்களாக சேர்க்கப்பட முடியும் என்பது தான்.

இதைக் குறிந்து நானல்ல வேதம் சொல்வதை கவனிப்போம். எபே. 3:14 –ல் '**இதினிமித்தம் நான் பரவோகத்திலும், பூலோகத்திலும் உள்ள முழுக்குடும்பத்திற்கும் நாமகரணராகிய...**' என்று வேதம் ஒரு முழுக் குடும்பத்தை நமக்கு அறிகப்படுத்துகிறது. பரலோகக் குடும்பத்தில் பிதாவாகிய தேவனும் (சங். 136:26), குமாரனாகிய கிறிஸ்துவும் (எபி. 9:24), பரிசுத்த ஆவியானவரும், தேவதூதர்களும் (மாற்கு 13:32) வாசம் செய்கிறார்கள். இத்தகு பரலோகக் குடும்பம் எவ்வளவு பெரிது, பெருமைக்கும், கனத்துக்கும் உரியது என்று பாருங்கள். இவ்வளவு கனத்திற்குரிய பரலோகக் குடும்பத்தோடு இதன் தொடர்ச்சியாக பூலோகத்திலுள்ள குடும்பத்தையும் வேதம் சுட்டிக்காட்டுகிறது.

பூலோகத்திலுள்ள குடும்பமாக '**தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படிக்கும் இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது**'(1திமோ 3:15)என்று பரிசுத்த ஆவியானவர் சுட்டிக்காட்டுகிறார். அப்படியென்றால், கிறிஸ்துவால் பூமியில் கட்டப்பட்ட சபையில் இருக்கும் அனைத்து விசுவாசிகளும் பூலோகக் குடும்பத்தார் ஆவார்கள். அதாவது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர், தேவதூதர்கள் இருக்கக்கூடிய பரலோகக் குடும்பத்தோடு இணைக்கப்பட்டவர்களாவார்கள். இது எவ்வளவு பெரிய ஐக்கியம், சபையாராகிய நமக்குக் கிடைத்த பாக்யம் என்பதை உணர்ந்து பாருங்கள்.

இந்தக் குடும்பத்தில் பாரம்பரியமோ, பெற்றோரோ, பட்டம், பதவியோ, செல்வாக்கோ,வருட சந்தாவோ நம்மை சேர்க்கவில்லை. அப் 2: 47 ன் படி கர்த்தரே நம்மை சேர்த்தார். கிறிஸ்துவின் இரத்தமே ஞானஸ்நானத்தின் மூலம் நம்மை சபையில் இணைத்தது. (1 யோ 1:7; வெளி 1:6). இன்று உலகமெங்கும் சுவிசேஷத்தைக் கேட்டு

இரட்சிக்கப்பட்ட எண்ணிக்கையற்ற தேவபிள்ளைகள் பூலோகக் குடும்பமாகிய சபையில் இணைக்கப்பட்டு வருகிறார்கள் [யோவா 1:12].

பரலோகக் குடும்பத்தைக் குறித்து அங்கு, '**நித்திய மகிழ்ச்சி, ஓயாத கீதம்**' என்று சொல்லப்படுகிறது. இதன் பிரதிபலிப்பு பூலோகக் குடும்பத்தில் காணப்படுகிறதா? ஒரு புதிய கார் வாங்கும் பொழுது காரை உருவாக்கிய கம்பெனி மூலம் காரை பராமரிப்பது குறித்து ஒரு இலவச புத்தகம் கொடுக்கப்படும். அதன்படி காரை பராமரிக்கும் பொழுது அதன் பலனை முழுமையாய் அனுபவிக்க முடியும். ஆம் குடும்பத்தைத் திட்டமிட்டவர், உருவாக்கியவர் நமது தேவன். அந்த குடும்பம் எப்பொழுதும் மகிழ்ச்சிக்குரியதாயிருக்க தேவன் தந்த ஆலோசனைகள் நிறைந்த புத்தகம் தான் வேதம். '**கர்த்தருடைய வேதத்தின் படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள். உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்திரமாக்கிக் கொண்டேன். அவைகளே என் இருதயத்தின் மகிழ்ச்சி**' [சங் 119:1,111]. ஆம், வேத ஆலோசனைகள் மட்டுமே பூலோகக் குடும்பத்தில் மகிழ்ச்சியை பெருகச் செய்யும். வேத ஆலோசனை படி அன்பு கூறுகிற கணவன் [தகப்பன்] கீழ்ப்படிந்து குடும்பத்தை கட்டுகிற மனைவி, தகப்பன் கற்பனைகளை காத்துக்கொண்டு, தாயின் போதகத்தைத் தள்ளிவிடாமல் அதன்படி கருத்தாய் நடக்கிற பிள்ளைகள் இருக்கும் பொழுது அந்த குடும்பத்தில் சமாதானம் நிலைத்திருக்கும், மகிழ்ச்சி பொங்கும். இப்படிப்பட்ட மகிழ்ச்சியின் குடும்பமே பரலோகக் குடும்பத்தோடு இணைக்கப்படும்.

என் குடும்பம் தேவனுடைய குடும்பத்தோடு இணைக்கப்பட்டிருப்பது எனக்கு பெருமையே. உண்மைதான். ஆனால், என் குடும்பத்தால் தேவனுடைய குடும்பத்திற்கு பெருமை, கனம் உண்டா? மூன்று முன் உதாரணமுள்ள குடும்பங்களை முன்நிறுத்தி ஆராய்வோம்.

ஒன்று [ஆதி 6,7,8 ] நோவாவின் குடும்பம் நோவாவின் காலத்தில் வாழ்ந்த மக்களிடையே, தேவகோபம் எழும் அளவுக்கு அக்கிரமம் பெருகியிருந்தது. ஆகவே, தேவன் மனிதர்களையும், உயிருள்ள ஜீவன்கள் அனைத்தையும் அழிக்க முடிவெடுத்தார். ஆனாலும் நோவாவுக்கும் அவன் குடும்பத்துக்கும் தேவ கண்களில் கிருபை கிடைத்தது அவர்கள் காக்கப்பட்டார்கள். காரணம் அக்கிரமம் நிறைந்த அதே பூமியில் நோவா, அவன் மனைவி, திருமணமான மூன்று ஆண் பிள்ளைகள், அவர்களது மூன்று மனைவிமார்களுமான இந்த குடும்பம், அக்கிரமம் நிறைந்த அந்த குடும்பங்களுக்கு விலகி, தேவனுக்கு கீழ்ப்படிந்து '**தேவன் தங்களுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய்து**' [ஆதி 6:22, 7:5] தேவ குடும்பத்தின் பெருமையை நிலைநாட்டினார்கள்.

அன்பானவர்களே! நம் குடும்பநிலை குறித்து சுற்றுச்சூழலை சுட்டிக்காட்டி சாக்குப்போக்குச் சொல்லுகிறோமா? நோவாவின் குடும்பத்தில் மனைவி, 3 ஆண் பிள்ளைகள், இவர்களுடைய 3 மனைவிமார்களும், 300 முழ நீளம், 50 முழ அகலம், 30 முழ உயரமுமான, பிரம்மாண்டமான பேழையை கொப்பேரு மரத்தால் மட்டும் நீண்ட நாட்களாகக் கட்டி முடித்தார்கள் என்பதில் அவர்களுடைய (8 பேர்) ஒரு மனப்பாடு வெளிப்படுகிறது. இப்பண்பு தேவ பக்தியால் மட்டுமே சாத்தியமாகும் (அப் 2:46 ). தேவத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஒப்புக்கொடுத்தல், ஒரு மனம் குடும்பத்தில் அவசியமாகும். சாக்குப்போக்குச் சொல்லாமல் எல்லோருமாக ஒருமனப் பட்டவர்களாகக் குடும்பத்தைக் கட்டுங்கள். அது நம் குடும்பத்தை அழிவினின்று காத்துப் பரலோகக் குடும்பத்தோடு இணைக்கும்.

இரண்டாவதாக, யோசுவாவின் குடும்பத்தை கவனிப்போம். தேவதாசர் மோசே மரித்த பின் அவருடைய ஊழியக்காரனாகிய யோசுவா இஸ்ரவேல் மக்களை கானானுக்குள் அழைத்துச் சென்று எல்லா கோத்திரங்களுக்கும் தேசத்தைப் பங்கிட்டுக் கொடுத்தான். இவ்வாறு தேவன் இஸ்ரவேலுக்குக் கொடுத்த எல்லா வாக்குகளையும் நிறைவேற்றி முடித்தார். இந்நிலையில் வணங்கா கழுத்துள்ள இஸ்ரவேலரை நன்கு அறிந்திருந்த யோசுவா, அவர்களை நோக்கி, மீண்டும் தேவனை விட்டு விலகி விக்கிரக ஆராதனைக்கு உங்களை ஒப்புக்கொடுக்கலாகாது என்று எச்சரிக்கை செய்தான். முடிவாக தன் குடும்பத்தை அவர்கள் முன் நிறுத்தி, '**நானும் என் வீட்டாருமோ வென்றால் கர்த்தரையே சேவிப்போம்**' (யோசு 24:15) என்று உறுதி அளித்தான். தன் குடும்பம் முழுமையாக பரலோகக் குடும்பத்தோடு ஐக்கியமாயிருக்கும் என்று நற்சாட்சி பகர்ந்தான். இந்த பெருமைக்குரிய உறுதியான குடும்பத்தை கண்ணோக்கிய இஸ்ரவேலர்களும், '**நம்முடைய தேவனாகிய கர்த்தரையே சேவித்து அவர் சத்தத்திற்கு கீழ்ப்படிவோம்**' என்று உறுதியளித்து, தங்களை ஒப்புக்கொடுத்து வாழ்ந்து காட்டினார்கள் (யோசுவா 24: 24,31) தேவனுடைய வீட்டாராகிய நம்முடைய குடும்ப வாழ்க்கையும் அநேக குடும்பங்களை பரலோக குடும்பத்தோடு இணைத்துக் கொள்ளும்படி நற்சாட்சியுள்ள குடும்பங்களாயிருக்க நம்மை தாழ்த்தி ஒப்புக் கொடுப்போம்.

மூன்றாவதாக, அப் 10-ல் இத்தாலியயா பட்டாளத்தில் நூற்றுக்கதிபதியாயிருந்த கொர்நெலியு, தேவபக்தியுள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்தான். பேதுருவின் மூலம் சுவிசேஷத்தைக் கேட்டு, கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று குடும்பமாக தேவனுடைய வீடாகிய சபையில் அதாவது பூலோகக் குடும்பத்தில் தன்னை இணைத்துக் கொண்டான்.

சபைக்கு எதிரான ஆட்சி நடந்து கொண்டிருந்த முதல் நூற்றாண்டில், தான் ஒரு அரசு ஊழியராயிருந்தும் தைரியமாய், வெளிப்படையாய் குடும்பமாக தேவ (சபையில்) குடும்பத்தில் தங்களை இணைத்திருப்பது மிகப் பெரும் பக்தியாகும். இன்று பள்ளிகளில் சேர்க்கும் நம் பிள்ளைகளைக் குறித்து என் பிள்ளை கிறிஸ்தவன்(ள்) என்று வெளிப்படையாய் பதிவு செய்ய முடிகிறதா? மேலும்,...**யூத ஜனங்கள் எல்லாராலும் நல்லவரென்னு சாட்சி பெற்றவருமாகிய கொர்நெலியு**' என்று (அப் 10:22) சாட்சி பெற்ற வெளிப்படையான வாழ்க்கைதான், அவனோடு அநேகரை பூலோகக்குடும்பத்தில் சேர்த்தது 10: 24,48). பிரியமானவர்களே! நம் குடும்பம் மட்டுமல்ல நம்மைச் சார்ந்த குடும்பங்களும் பூலோகக் குடும்பத்தோடு இணைக்கப்பட நாம் பக்தியுள்ள வாழ்க்கையை வெளிப்படையாய் வாழ்ந்து காட்டுவோம். தேவன் நம் மூலம் பெரிய அறுவடையை நிகழ்த்துவார். இதில் ஆண்களுக்கு மட்டுமல்ல, லீதியாள் போன்ற பக்தி வைராக்கியமுள்ள பெண்களாலும் சாதிக்க முடியும் என்பதே வேதம் கூறும் சாட்சியாகும் (அப் 16:14,15).

அன்பானவர்களே! இப்பூமியில் வாழ்ந்த நோவா, யோசுவா, கொர்நெலியு, லீதியாள் ஆகியோர் தங்கள் குடும்பத்தை தேவனோடு பூலோகக் குடும்பத்தில் இணைத்து, முழுக் குடும்பத்திற்கும் தங்களை தகுதிப்படுத்திக் கொள்ள முடிந்ததென்றால், சபையாகிய பூலோகக் குடும்பத்தில் அங்கமாய் இருக்கும் நம்மாலும் முடியும் என்பதே வேதம் கொடுக்கும் தைரியம். இப்பூலோகக் குடும்பம் ஒரு பகுதிதான். கிறிஸ்துவின் வருகையில் இப்பூலோகக் குடும்பத்தை அவர் எடுத்து தேவனும் பிதாவுமாய் இருக்கிறவரிடத்தில் ஒப்புக்கொடுப்பார் (1 கொரி 15:24). இவ்விதமாய் முழுக் குடும்பமும் பரலோகத்தில் இணைக்கப்படும். இந்த இணைப்பு நித்திய மகிழ்ச்சியே! ஆமென்!! அனுபவிக்க ஆயத்தமாய் காத்திருப்போம்!!!

**நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் தேவனிடம் நம் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான மிகச் சிறந்த காரணங்களுள் ஒன்று நாம் வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்தும் முடிக்காமல் இருக்கும் காரியங்களை நாம் முழங்காலில் நிற்பதால் தேவன் சில நிமிடங்களில் முடித்துவிடுகிறார்.**

✝

## கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்

# கள்ளக்காரியத்துக்கு தூரமாயிருங்கள்

**சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார்.** சென்னை

முன்னுரை :–

1. நம்முடைய பிதாவாகிய தேவன் இஸ்ரவேல் மக்களை மோசேயின் மூலமாக எகிப்து தேசத்திலிருந்து சிவந்த சமுத்திரத்தின் வழியாய் அழைத்து வந்தார் என்று சென்ற பாடத்தில் பார்த்தோம்.

2. அவர்கள் சீனாய் மலையண்டை வந்தபோது அவர்களுக்கு 10 கற்பனைகளும் அதனைச்சார்ந்த கட்டளைகளுமாக நியாயப்பிரமாண சட்டங்களைக் கொடுத்தார்.

3. அந்த சட்டங்களில் ஒரு சட்டமாக: 'கள்ளக்காரியத்துக்குத் தூரமாயிருப்பாயாக என்று தேவன் கட்டளையிட்டார். யாத். 23 : 7. அந்தக் கள்ளக்காரியங்கள் எவைகள் என்று தேவன் பட்டியலிட்டார்.

4. கள்ளக் காரியத்திற்கு விலகியிருக்கவேண்டும் என்பது எல்லா காலங்களிலும் பொருந்தக்கூடிய கட்டளையாய் இருக்கிறது.

**I. பூமிக்குரிய நடைமுறை வாழ்க்கையில் இஸ்ரவேலர் விலகியிருக்க வேண்டிய கள்ளக்காரியங்களை தேவன் பட்டியலிட்டார். அதில் சிலவற்றை கவனிப்போமாக!**

அ. கள்ளத்தனமாக கொலைசெய்வதை தேவன் வெறுக்கிறார்: குற்றமில்லாதவனையும் நீதிமானையும் கொலைசெய்யாயாக; நான் துன்மார்க்கனை நீதிமான் என்று தீர்க்கமாட்டேன்.

ஆ. கள்ளத்தனமாக பரிதானம் வாங்குவதை தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார்: 'பரிதானம் வாங்காதிருப்பாயாக; பரிதானம் பார்வையுள்ளவர்களைக் குருடாக்கி, நீதிமான்களின் வார்த்தைகளைப் புரட்டும்.'

இ. தனக்குக்கீழ் வேலை செய்கிறவர்களை அற்பமாக நினைப்பவனை தேவன் நியாயந்தீர்ப்பார்: ''அந்நியனை ஒடுக்காயாக; எகிப்துதேசத்தில் அந்நியர்களாயிருந்த நீங்கள் அந்நியனுடைய இருதயத்தை அறிந்திருக்கிறீர்களே,''யாத். 23:7–8.

ஈ. வியாபார எடைகளிலே பணத்திலே கள்ளத்தனம் செய்வது தேவனுக்கு அருவருப்பானது. ''கள்ளத்தராசு **கர்த்தருக்கு** அருவருப்பானது: முத்திரையான நிறைகல்லோ அவருக்குப் பிரியம்,'' நீதி.11:1.

உ. நம்பிக்கையற்ற வார்த்தைகள் தேவனையும் மனிதரையும் பகைக்கும்: ''கள்ளநாவு தன்னால் கிலேசப்பட்டவர்களைப் பகைக்கும்; இச்சகம்பேசும் வாய் அழிவை உண்டுபண்ணும்,'' நீதி. 26 : 28.

**II. இஸ்ரவேல் மக்கள் மனிதர்களைமட்டுமல்ல தேவனிடத்திலும் பொய்பேசி கலகம் செய்து அவரை ஏமாற்றினார்கள்!**

அ. ஒரு கட்டத்தில் தேவன் இஸ்ரவேலரை ஏன் வெறுத்தார் கைவிட்டார் என்பதற்கு இதுவே ஒரு காரணமாயிற்று: ''**கர்த்தருக்கு** விரோதமாய்த் துரோகம்பண்ணி, பொய்பேசி, எங்கள் தேவனை விட்டுப் பின்வாங்கினோம்; கொடுமையாகவும் கலகமாகவும் பேசினோம்; கள்ளவார்த்தைகளைக் கர்ப்பந்தரித்து, இருதயத்திலிருந்து பிறப்பிக்கப் பண்ணினோம்,'' ஏசா. 59:13.

ஆ. யூதா மனந்திரும்புவதிலும் கள்ளத்தனமாய் நடந்தார்கள்: ''இவைகளையெல்லாம் கண்டும், யூதா என்கிற அவளுடைய சகோதரியாகிய துரோகி, கள்ளத்தனமாய்த் திரும்பினாளேயன்றி, முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்பவில்லை என்று **கர்த்தர்** சொல்லுகிறார்.'' எரே. 3:10. இன்றைக்கும் சிலர் மனந்திரும்பினார்கள் என்று சொன்னாலும் அவர்கள் முழுமையாக தேவன் ஏற்கும்படியான மனந்திரும்புதலின் கனிகளைக் கொடுக்கவில்லை, மத். 3:8.

இ. கள்ளத்தீர்க்கதரிகள்மேல் பிரியமாயிராமல் விலகியிருங்கள்: ''தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்: இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது; ஆனாலும், முடிவிலே என்னசெய்வீர்கள்?'' எரே. 5:31.

1]. கள்ளத்தீர்க்கதரிசனத்துக்கு செவிகொடுத்தால் என்னநடக்கும் என்று கர்த்தர் உரைக்கிறார்: ''பஸ்கூரே. நீயும் உன் வீட்டில் வாசமாயிருக்கிற யாவரும் சிறைப்பட்டுப் போவீர்கள்; நீயும் உன் கள்ளத்தீர்க்கதரிசனத்துக்குச் செவிகொடுத்த உன் சிநேகிதர் யாவரும் பாபிலோனுக்குப் போய், அங்கே மரித்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவீர்கள் என்று சொல்லுகிறார் என்றான்,'' எரே. 20 : 6; 5. மத் 24 : 11.

2]. இயேசுவானவர் ஊழியம் செய்த காலத்திலும் கள்ளத்தீர்க்கதரிசிகள் இடையூறுகள் செய்தார்கள்: ''கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்,''மத். 7:15.

3. அப்போஸ்தலர்கள் ஊழியத்திலும் கள்ளத்தீர்க்கதரிசிகள் விசுவாசிகளை இடறச்செய்தார்கள்: ''அவர்கள் பாப்போ பட்டணம் வரைக்கும் தீவைக் கடந்துவந்தபோது, பர்யேசு என்னும் பேர்கொண்ட மாயவித்தைக்காரனும் கள்ளத் தீர்க்கதரிசியுமான ஒரு யூதனைக் கண்டார்கள்,'' அப் 13:6.

4. இன்றைக்கும் கள்ளத்தீர்க்கதரிசிகளை சோதித்தறிந்து

விலகியிருக்க வேண்டும் : ''பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனாலுண்டான வைகளோ என்று சோதித்தறியுங்கள், 1யோவா. 4:1

5. கள்ளத்தீர்க்கதரிசிகள் மற்றும் கள்ளப்போதகர்களுக்கு விலகியிருக்க வேண்டும்: 'கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள். அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள்நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும். பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்ளுவார்கள்; பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது.' 2பேது. 2:1–3. இப்படிப்பட்டவர்களை விட்டு விலகியிருக்கவேண்டும்.

6. தேவனுடைய சபையை வியாபாரம் போன்ற பணவிஷயங்களி னால் கள்ளர்குகையாக்கக் கூடாது: 'என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயம் உங்கள் பார்வைக்குக் கள்ளர்குகையாயிற்றோ? இதோ,நானும் இதைக் கண்டேன் என்று **கர்த்தர்** சொல்லுகிறார்.' எரே. 7:11. மத். 21:13; லூக். 19: 46; .யோவா 2:13–17.

7. கள்ளத்தரிசனத்தையும் தேவன் ஒழித்துப்போடுவார்: 'இஸ்ரவேல் வம்சத்தாரின் நடுவில் இனிச் சகல கள்ளத்தரிசனமும் முகஸ்துதியான குறிசொல்லுதலும் இராமற்போகும்,' எசே. 12:24.

**III. கள்ளப்போதகத்துக்கும், கள்ளமேய்ப்பனுக்கும், கள்ளஅப்போஸ்தலனுக்கும், பழைய ஏற்பாட்டின் முறைகளைக் கைக்கொள்ளவேண்டும் என்கிற கள்ளச் சகோதரர்களுக்கும் விலகியிருக்க வேண்டும் என்று ஆண்டவர் நம்மை எச்சரிக்கிறார்!**

அ. 'ஒருவன் நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளாமல், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால், அவன் இறுமாப்புள்ளவனும், ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்களையும் வாக்குவாதங் களையும்பற்றி நோய்கொண்டவனுமாயிருக்கிறான்; அவைகளாலே பொறாமையும், சண்டையும், தூஷணங்களும், பொல்லாத சம்சயங்களுண்டாகி, கெட்ட சிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று

எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்: இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு,' 1தீமோ. 6:3–5.

ஆ. 'வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கும். விசுவாசத்தினால் விளங்கும் தெய்வீக பக்திவிருத்திக்கு ஏதுவாயிராமல், தர்க்கங்களுக்கு ஏதுவாயிருக்கிற கட்டுக்கதைகளையும் முடிவில்லாத வம்சவரலாறுகளையும் கவனியாதபடிக்கும். நீ சிலருக்குக் கட்டளையிடும்பொருட்டாக,' 1தீமோ. 1:3.

இ. 'மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக் காரனுமாயிருக்கிறான். எனக்கு முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள், ஆடுகள் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை, யோவா. 10:1, 8.

ஈ. 'அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள்,' 2கொரி. 11 : 13. இன்றைக்கும் கள்ள அப்போஸ்தலர்கள் இருக்கிறார்கள் அவர்களுக்கு நாம் விலகியிருக்கவேண்டும்.

உ. 'கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை உளவுபார்த்து நம்மை நியாயப் பிரமாணத்திற்கு அடிமைகளாக்கும்பொருட்டாகப் பக்கவழியாய் நுழைந்த கள்ளச் சகோதரர் நிமித்தம் அப்படியாயிற்று, கலா. 24. இன்றைக்கும் கள்ளச்சகோதர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு விலகியிருக்கவேண்டும்.

ஊ. கள்ளப்போதகர்களின் வீணான பேச்சுக்களுக்கு விலகியிருக்கவேண்டும்: 'சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் (கள்ளப்போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்,' 2 தீமோ. 2:16.

**முடிவுரை:–**

1. இஸ்ரவேலருக்கு அவர்கள் பாவத்தை தேவன் அறிவித்து அவர்களை மனந்திரும்ப அழைத்தார்; ஆனால் அவர்களோ அவருக்கு செவிகொடாமல் போனார்கள். ஆகையால் தேவன் அவர்களை நியாயந்தீர்த்தார்.

2. 'நானோ, யாக்கோபுக்கு அவன் மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி, **கர்த்தருடைய** ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன். நியாயத்தை அருவருத்து,

செம்மையானவைகளையெல்லாம் கோணலாக்கி, சீயோனை இரத்தப்பழியினாலும், எருசலேமை அநியாயத்தினாலும் கட்டுவிக்கிற யாக்கோபு வம்சத்துத் தலைவர்களே, இஸ்ரவேல் வம்சத்து அதிபதிகளே, இதைக் கேளுங்கள்.

3. அதின் தலைவர்கள் பரிதானத்துக்கு நியாயந்தீர்க்கிறார்கள்; அதின் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள்; அதின் தீர்க்கதரிசிகள் பணத்துக்குக் குறிசொல்லுகிறார்கள்; ஆகிலும் அவர்கள் **கர்த்தரை** சார்ந்துகொண்டு: **கர்த்தர்** எங்கள் நடுவில் இல்லையோ? தீங்கு எங்கள்மேல் வராது என்கிறார்கள். ஆகையால் உங்கள்நிமித்தம் சீயோன் வயல்வெளியைப்போல உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம், ஆலயத்தின் பர்வதம் காட்டுமேடுகளாய்ப்போம்,' மீகா 3:8-12.

4. இஸ்ரவேலர்கள் முகத்தையல்ல. முதுகை எனக்குக் காட்டினார்கள்; நான் ஏற்கனவே அவர்களுக்கு உபதேசித்தும் அவர்கள் புத்தியை ஏற்றுக்கொள்ளச் செவிகொடாமற்போனார்கள்' என்று அவர்களுக்கு விரோதமாய் கர்த்தர் முழங்கினார். எரே.32:33.

5. இன்றைக்கும் நாம் கர்த்தருக்கு விரோதமாக கள்ளக்காரியங்களுக்கு விலகியிராமல், அவைகளை அங்கீகரித்தால் நாம் நித்தியமாக நரகத்தில் வாழவேண்டியிருக்கும்.

6. 'இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்,' யோவா. 8:31-32.

7. இயேசுவானவர் சொல்கிறார்: 'தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள், ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே. என் வசனத்தை நீங்கள் என் அறியாமலிருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா?' யோவா. 8:40,43.

8. பரிசுத்த ஆவியானவர் நம்மை அறிவுறுத்தி எச்சரிக்கிறார்: 'உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள். கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக் குவாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்குப் பங்குள்ளவனாயிருக்கிறான்,' 2யோவா. 1:8-11. ஆமென்!!!

# வேண்டாம் என மறுத்து விடு!

**Bro. பாண்டியன்**

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக, நாம் ஒன்றை கவனத்தில் வைக்க வேண்டும் கிறிஸ்தவர்கள் உலகத்தாரல்ல, தேவனால் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் என்பதே அது. இப்படியிருக்க நமக்குக் கிடைக்கும் சில தவறான வாய்ப்புகளையும், வெகுமானங்களையும் நாம் மறுத்து விடக் கற்றுக் கொள்ள வேண்டும். லஞ்சம் வாங்குவது குற்றம் என்று உலகம் இப்போதுதான் அறிவுரை சொல்கிறது. ஆனால், வேதத்தில் மோசேயின் காலத்திலேயே அது தெளிவாகக் கட்டளையிடப்பட்டுள்ள து என்பது ஆச்சரியமாக உள்ளது ( யாத் 23:8) அப்படி ஒரு கிறிஸ்தவன் தன் வாழ்க்கையில் எதை எல்லாம் மறுக்க வேண்டும் என்றும் பைபிள் பல உதாரணங்கள் மூலம் நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறது. கிடைக்கின்ற வாய்ப்பை எல்லாம் பயன்படுத்து என்பது உலக போதனை. அப்படி இல்லாமல் அது அன்பளிப்பாக இருந்தாலும் சிலவற்றை மறுக்க வேண்டும் என்பதே நமக்குப் பாடமாகும்.

லோத்தையும் அவன் குடும்பத்தார் மற்றும் உடைமைகளை எதிரிகள் கொள்ளையடித்துச் சென்றபோது, ஆபிரகாம் தன் ஆட்களை கூட்டிச் சென்று எல்லாவற்றையும் திருப்பிக் கொண்டு வந்தான். அப்போது சோதோமின் ராஜா ஆபிரகாமிடம் **ஜனங்களை எனக்குத் தாரும் பொருட்களை நீர் எடுத்துக் கொள்ளும்**' என்றான் (ஆதி 14:21 23 ) ஆனால், ஆபிரகாம் ஒரு மனுஷன் என்னை ஐசுவரியவானாக மாற்றினான் என்று சொல்லாதபடிக்கு அதில் ஒரு செருப்பின் வாரைக் கூட எடுத்துக் கொள்ள மாட்டேன் என்று மறுத்து விட்டான். தேவன் **அவனை பெரிய ஜாதியாக்குவேன்** என்று சொன்னதை ஆபிரகாம் நம்பினபடியால் ஒரு தேசத்தின் செல்வத்தையே மறுத்து விட்டான் நாமும் நமக்குத் தகாத வழியில் வரும் செல்வத்திற்கு ஆசைப்படக்கூடாது என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆகும்.

அடுத்து செல்வச் செழிப்பு மிக்க ஒரு பெண் வலிய வந்து யோசேப்யை விரும்பிய போது அது தகாத உறவு என்றும், தான் தேவனுக்கு பயப்படுகிறவன் ஆகவே இதற்கு உடன்பட மாட்டேன் என மறுத்து விட்டான். இன்றை, சமுதாயத்தில் சமயம் பார்த்து தவறு செய்யும் இளைஞர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை செய்திகள் வாயிலாக அறிகிறோம். அநேக தவறான உறவுகளால் பல குடும்பங்கள் சீரழிந்து போவதையும் கேள்விப்படுகிறோம். அதனால்,

தான், ஞானி சாலோமோன் தன் நீதிமொழிகளில் என் மகனே தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கும் தீமைக்கும் விலகியிரு என்று புத்தி சொல்லுகிறார். சிம்சோன் என்ற மகா பராக்கிரமசாலி தன் பெற்றோரின் அறிவுரையைக் கேட்காமல் அந்நிய ஸ்திரீயிடம் சென்று தன் அந்தஸ்தையும், மேன்மையையும் இழந்து போனான் அல்லவா (நியா 14:3) ஆகவே, இளைஞர்கள் இப்படிப்பட்ட காரியங்களை மறுத்து விட வேண்டும் என்பதில் எச்சரிக்கையாயிருங்கள்.

நமக்குத் தெரிந்தபடி படைத்தளபதி நாகமான் குஷ்டரோகத்தை எலிசா யோர்தானில் ஏழுதரம் மூழ்கச் செய்து சுகமாக்கினார் முதலில் மறுத்த நாகமான் பிற்பாடு கீழ்ப்படிந்து சுகத்தைப் பெற்றான் ஆகவே, நாம் தேவனுடைய வார்த்தைக்கு எந்த சூழ்நிலையிலும் மறுப்புச் சொல்லக்கூடாது என்று அறிகிறோம். ஆனால், இதற்காக நாகமான் சில வெகுமதிகளைக் கொடுக்க முன்வந்த போது தேவனுடைய மனுஷனாகிய எலிசா **மறுத்து விட்டான்.** ஏனெனில், அந்த சுகம் வல்லமையுள்ள இஸ்ரவேலின் தேவனிடம் இருந்து வந்ததை அந்த அந்நிய மனுஷனும், தேசத்தாரும் உணர்ந்து கொள்ளவே எலிசா அதை மறுத்து விட்டான். மனிதர் பணத்தால் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம் என நினைக்கின்றார்கள். பேதுருவின் அற்புத சுகங்களைக் கண்ட மாயவித்தைக்காரன் சீமோன் கூட அப்படி எண்ணிய போது, உன் பணம் உன்னோடே கூட நாசமாய் போகக்கடவது என்று பேதுரு கண்டித்து மறுத்தார் (அப் 8:20) ஆகவே, தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட இடங்கொடாமல் நாம் இப்படியாக சில காரியங்களை மறுத்து விட வேண்டும் (ரோமர் 2:24)

தேவதாசனாகிய யோபுவின் மனைவி அவனுடைய ஏற்றத் தாழ்வுகளை உடனிருந்து பார்த்தவள். ஆனால், யோபுவுக்கு நேர்ந்த இக்கட்டுகளைக் கண்டபோது அவள் மன வேதனையின் உச்சக்கட்டமாகத்தான் நீ தேவனை தூஷித்து ஜீவனை விட்டு விடு என்று சொன்னாள். ஆனாலும், உத்தமனாகிய யோபு பொறுமையின் சிகரமாய், தேவனிடம் நன்மை, தீமை இரண்டையுமே பெற வேண்டும் என யாரும் எதிர்பாராத பதிலைச் சொன்னார். நாம் நம்முடைய கஷ்டங்களில் அநேக முறை வனாந்திர இஸ்ரவேலரைப் போல முறுமுறுக்கிறோம். ஆனால், அது தேவனுக்கு எதிரானது என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும் ( 1 கொரி. 10:10 ) அவ்வளவு பெரிய இழப்பிலும் யோபு தன் தேவனைப் பற்றிக் குறை சொல்லவில்லை என்பதை நாம் கவனித்து நடக்க வேண்டும். ஆக, தேவனைப் பற்றிக் குறை சொல்வதை மறுத்து விட வேண்டும். பசியினால் வாடியும், மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வார்த்தையினாலும் பிழைப்பான் என சாத்தானுக்கு இயேசு மறுப்பு தெரிவித்தார் அல்லவா ?

**Say no to drugs** என அரசு போதை பழக்கத்திற்கு எதிராக விளம்பரம் செய்கிறது. ஆனால், ஒருவன் தேவனுக்கு பயந்தால் மட்டுமே பொல்லாப்புக்கு விலக முடியும் என்பதே உண்மை. பிசாசின் தந்திரங்களால் இன்றைய நாட்களில் பிறந்தநாள், திருமணம் போன்ற விசேஷங்களில் மதுப்பழக்கம் பெருகி வருகிறது. தானியேல் ராஜா குடிக்கிற உயர்ரக திராட்சை ரசத்தைக் கூட ஒரு தீர்மானத்தோடே மறுத்து விட்டான் அல்லவா? [தானி. 1:8] ரேகாபியர் என்ற அந்நிய ஜனங்கள் மதுவுக்கு மறுத்து வாழ்ந்ததை தேவன் தம் ஜனங்களுக்கு முன்மாதிரியாக எடுத்துச் சொல்வதைக் கவனியுங்கள் [எரே. 35:5] எந்தத் தவறும் ஒரு நாள் கண்டுபிடிக்கப்படும் [நீதி. 10:9 ] தன்னை ராஜாவாக்க முயன்ற போது இயேசு விலகினார் [ யோவான் 6: 15 ]தேவ சித்தம் நாடி தேவனுக்கு மகிமையாக வாழுவோம். தேவக் கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென்!

## இயேசுவைப் பற்றி உரைத்ததின் நிறைவேற்றம்
[மத். 12:17-21].

**இதோ, நான் தெரிந்து கொண்ட என்னுடைய தாசன்**

**என்ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற என்னுடைய நேசன்**

**என் ஆவியை அவர் மேல் அமரப்பண்ணுவேன்**

**அவர் புறஜாதியாருக்கு நியாயத்தை அறிவிப்பார்**

**வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்குரலிடவுமாட்டார்**

**அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை**

**அவர் நியாயத்திற்கு ஜெயங்கிடைக்கப்பண்ணுகிறவர்**

**தெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கியெரிகிற திரியை**

**அணைக்காமலும் இருப்பார்.**

**அவருடைய நாமத்தின் மேல் புறஜாதியார் நம்பிக்கை வைப்பார்கள்**

## 09.06.2024 - IAF ஆவடியில் நடந்த இலவச மருத்துவ முகாமின்போது...







## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6.30 - 7.00 am

Rajanayagam & Benny Martin On Heaven TV
Every Thursday, Friday, Saturday 6:30 - 7.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 3:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026






"Registered" with RNI No: TNTAM/2006/20466
Postal regn. No. Erode/26/2024 - 2026
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2024 - 2026
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

## எங்களது இதர வெளியீடுகள்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**










### வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701. தமிழ்நாடு, இந்தியா.

To:

### திருமறை தியானம்

**நம்பிக்கை TV**
செவ்வாய் - காலை 6:30 - 7:00 மணி
**ஹெவன் TV**
வியாழன், வெள்ளி, சனி – காலை 6:30 - 7:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.